# இறிஸ்தவ சத்தியங்களும் தவறான உபதேசங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறிஸ்தவ
# சத்தியங்களும்
# தவறான
# உபதேசங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக விபரங்களுக்கு

இலங்கை பெந்தகோஸ்தே சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நமது இரட்சகராகிய, இயேசுக்கிறிஸ்து, இரண்டாம் முறையாக மகிமையுடன் சீக்கிரம் வரப்போகின்றார். தீர்க்கதரிசிகளினால் கூறப்பட்டுள்ளபடி, பல்வேறு முன்னடையாளங்களும் இப்போது நிறைவேறி வருவது அனைவரும் அறிந்த விடயமாகும். மணவாளனாகிய இயேசுக்கிறிஸ்து வரும்போது, அவரது வருகைக்கெனக் காத்திருக்கும் பரிசுத்தர்கள் மாத்திரமே அவருடனே கூட எடுக்கப்பட்டு மகிமையடைவார்கள். ஏனையோர் கைவிடப்படுவார்கள். இத்தகைய பெரிதான இரட்சிப்பு இவ்வுலகில் வாழும் சகல இன, மத, மொழி பேசும் மக்களுக்கும் உரியதாகும். எனவே தமது அன்பான இரட்சகரின் நற்செய்தியை அனைத்து மக்களுக்கும் தெரியப்படுத்தி, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிப்போரை, பரிசுத்த சபை மூலம் அவரது வருகைக்கென ஆயத்தப்படுத்த உதவும் மாபெரும் பொறுப்பு ஒவ்வொரு உண்மைக் கிறிஸ்தவனிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காகவே இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது.

இந் நூலானது உண்மை விசுவாசிகளைக் கிறிஸ்தவ ஐக்கியத்தில் உறுதிப்படுத்தவும், கிறிஸ்தவர்களெனத் தம்மைக் கூறிக்கொள்வோர் கிறிஸ்தவ உபதேசத்தின் பரிசுத்தத்தைத் தெரிந்து கொள்ளவும், கிறிஸ்தவர்களல்லாதோர் கிறிஸ்தவ போதனைகளின் மகத்துவத்தை அறிந்து கொள்ளவும், வேண்டுமென்ற நோக்குடனும் எழுதப்பட்டதாகும். நூலின் எளிமை கருதி ஆன்மீக தத்துவம் தொடர்பான விடயங்கள் தர்க்கங்கள், தனிப்பட்ட அபிப்பிராயங்கள் முதலானவை தவிர்க்கப்பட்டுள்ளன. பரிசுத்த வேதாகமத்திலுள்ள வசனங்களை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு விடயங்கள் விளக்கப்படுகின்றன. தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஒரு சில வரலாற்று ஆதாரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன

தேவன் ஒருவரே; ஒன்றான மெய்த்தேவனாகிய அவர் பாவிகளை இரட்சிக்கும் படிக்கு பூமியில் மனிதனாக அவதரித்தார். சிலுவை மரணத்தின் மூலம் பாவத்தையும்; சாபத்தையும்; நோய்களையும்: சுமந்து தீர்த்தார்; மூன்றும் நாளில் உயிர்த்தெழுந்தார்! தேவனாலேயன்றி மனிதனைப் பாவத்திலிருந்து மீட்க எந்தவொரு மனிதனாலும் கூடாது; அவரை விசுவாசிப்போர் சமாதானமும், சௌக்கியமும், சுகமும் பெலனும் பெற்று இம்மையிலும் மறுமையிலும் மகிழ்ச்சியாக வாழலாம். இதுவே அன்புத்தேவனின் விருப்பமுமாகும். பரிசுத்த வேதாகமம் கூறும் நற்செய்தி இதுவேதான்.

இன்று உலகில் கிறிஸ்துவின் பெயரால் அநேகம் சபைகள் இயங்கி வருகின்றன. எல்லாச் சபைகளும் பரிசுத்த வேதாகமத்தையே தங்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத நூலாகக் கொண்டுள்ளன. ஆயினும் இவை தமக்கிடையே ஒன்றுக்கொன்று முரண்பாடான போதனைகளைக் கொண்டிருப்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். கிறிஸ்துவின் பரிசுத்தசபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு கடந்த இரண்டாயிரம் வருடங்களாக உலகின் வரலாற்றில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள்; உலக வழக்கு முறைகளையும், பாரம்பரியங்களையும் கிறிஸ்துவின் தூய சத்தியங்களுடன் கலப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்; மனச்சாட்சியில் சூடுண்ட வேதப் புரட்டர்கள் சத்தியங்களை மாற்ற முயற்சித்தமை முதலானவை சில காரணங்களாகும்.

இங்கு நாம் அவதானிக்க வேண்டிய மிக முக்கிய அம்சம் என்னவென்றால் "இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கின்றபடியினாலும் (எ பி 13:8) "உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத் 28:20) எனக் கூறியிருப்பதனாலும், ஆதிக் கிறிஸ்தவ சபையின் போதனைகள், உலக முடிவு பரியந்தம் எவ்வித கலப்புமின்றிப் போதிக்கப்பட வேண்டியனவாகும். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் எழுதப்பட்டுள்ள (தீமோ 3:16-17) பரிசுத்த வேதாகமத்திலுள்ள சத்தியங்களை மாற்றுவதற்கோ அன்றி அவற்றுடன் புதியவற்றைச் சேர்ப்பதற்கோ அகற்றுவதற்கோ பூமியில் யாருக்குமே அதிகாரம் அளிக்கப்படவில்லை. ஒருவன் தனக்குரிய சிந்தனைச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி, தேவனது வெளிப்பாடுகள் கொண்ட பரிசுத்த வேதாகமத்தை ஆராய்ந்து விளங்கிக் கொள்ள வேண்டியதும், தான் அறிந்து வேத சத்தியங்களுக்கு உண்மையுள்ளவனாக இருக்க வேண்டியதும் அவனது கடமையாகும். பரிசுத்த வேதாகமத்திலுள்ள சத்தியங்களை ஆராய்ந்தறிந்து நலமானதைத் தேடிக் கண்டுபிடிக்கக் கூடிய தேவபக்தியுள்ள மனிதருக்கென்றே இச்சிறு கைநூல் எழுதப்பட்டுள்ளது எனவே இதனை வாசிக்கும் அன்பர்கள் செபத்துடனும் பக்தியுடனும் பரிசுத்த வேதாகமத்தின் துணையுடனும் வாசித்துப் பயனடையும் படிகேட்டுக் கொள்ளுகின்றோம்.

"கர்த்தருடைய புத்தகத்தில் தேடி வாசியுங்கள், இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது, அவருடைய வாய் இதைச் சொல்லிற்று, அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்" (ஏசாயா 34:16) என எழுதியுள்ளபடி, போதனைகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட வசனங்களினால் உறுதிப்படுத்த வேண்டியனவாகும்.

இந்நூல் மூன்று பாகங்களைக் கொண்டது. முதலாம் பகுதியில் பரிசுத்த வேதாகமத்தின் மூலம் தேவன் தம்மைப்பற்றியும் தமது சித்தத்தைப்பற்றியும் வெளிப்படுத்தியிருக்கும் ஒழுங்கு, ஒன்றான மெய்த்தேவன் இருக்கின்றார்; அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூன்று ஆள்தத்துவத்தில் கிரியை செய்கின்றார் என்பதற்குரிய விளக்கம், தேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் மகா பெரிய அன்பு முதலான விடயங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியானது கிறிஸ்தவ சத்தியங்களும் பரிசுத்த சபையும் பற்றியதாகும். பரிசுத்த சபையானது கிறிஸ்துவுடன் வைத்திருக்க வேண்டிய மாரு ஐக்கியம் பற்றியும் கிறிஸ்துவின் மணவாட்டி சபையின் குணதிசயங்கள் பற்றியும் பரிசுத்தசபை பின்பற்ற வேண்டிய கிறிஸ்தவ சத்தியங்கள் பற்றியும் இப்பகுதியில் விரிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மூன்றும் பகுதியில் பரிசுத்த சபையின் வரலாறு தற்காலத்தில் பல்வேறு கிறிஸ்தவ சபைகளினல் பின்பற்றப்படும் தவுறன உபதேசங்கள் பற்றி விளக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## பகுதி I

### தேவனின் மகா பரிசுத்த அன்பு


1. பரிசுத்த வேதாகமம் 3
2. தேவன் இருக்கின்ருர் 6
3. ஒன்ருன மெய்த்தேவன் 9
4. அன்பான தேவன் 13


## பகுதி II

### கிறிஸ்துவின் பரிசுத்த சபையும் சத்தியங்களும்


5. கிறிஸ்துவின் பரிசுத்த சபை 17
6. பரிசுத்த வேதாகமம் கூறும் சத்தியங்கள் 20


## பகுதி III

### கிறிஸ்தவ சபைகளின் வரலாறும் தவருன உபதேசங்களும்


7. கிறிஸ்தவ சபைகளின் வரலாறு 29
8. தவருன உபதேசங்கள் 33
   - அ. பாரம்பரியம் 34
   - ஆ. பரிசுத்தசபை மனிதன் மேல் கட்டப்பட முடியுமா? 35
   - இ. பரிசுத்தவான்கள் பரலோகத்தில் இருக்கின்றனரா? 37
   - ஈ. சிருஷ்டிகளை வணங்கி வேண்டுதல் செய்தல் 40
   - உ. சுருபங்களைச் செய்தல் 43
   - ஊ. உத்தரிப்பு ஸ்தலம் 44
   - எ. குழந்தை ஞானஸ்நானமும் தெளிப்பு ஞானஸ்நானமும் 46
   - ஏ. ஏழாம் நாள் ஓய்வுச் சபையாரின் போதனைகள் 48
9. மனுக்குலத்திற்கு அளிக்கப்பட்ட மாபெரும் நற்செய்தி 52


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி I

# தேவனின் மகா பரிசுத்த அன்பு

"தேவன் தம்முடைய ஒரே பேருன குமாரனை விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." -யோவான் 3:16

"உன் தேவனுகிய கர்த்தரிடத்தில்
உன் முழு இருதயத்தோடும்
உன் முழு ஆத்துமாவோடும்
உன் முழு பலத்தோடும்
உன் முழுச் சிரத்தையோடும் அன்புகூர்ந்து,
உன்னிடத்தில் அன்பு கூருவதைப் போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக."

—லூக்கா 10:27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. பரிசுத்த வேதாகமம்

பரிசுத்த வேதாகமம் 66 புத்தகங்களைக் கொண்டது. இது பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, என இரு பகுதிகளைக் கொண்டதாகும். ஆதியாகமம் தொடக்கம் மல்கியாவின் புத்தகம் வரையான 39 புத்தகங்களைக் கொண்ட பழைய ஏற்பாடானது—கி.மு. 15ஆம் நூற்றுண்டு தொடக்கம் கி.மு. 5ஆம் நூற்றுண்டு வரையிலான 1000 வருடகால இடைவெளியில் அநேகம் தீர்க்கதரிசிகளினுல் எழுதப்பட்டதாகும்—யூதர்களின் வேத புத்தகமான இதில் கிறிஸ்துவின் பிறப்பு, இரட்சிப்பு, மரணம் முதலான பல்வேறு விடயங்கள் தீர்க்கதரிசனங்களாகக் கூறப்பட்டிருப்பதனுல்—யூதர்கள், வரப்போகும் மேசியாவாகிய கிறிஸ்து எப்போது வருவார் எனக் காத்துக் கொண்டிருந்தனர். ஆனுலும் யூதர்களின் வேதபுத்தகமாகவுள்ள இப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின்படியே குறிப்பிட்ட காலத்தில் கிறிஸ்து அவதரித்தபோது யூதர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

உதாரணமாக கிறிஸ்துவின் பிறப்பு, பாடுகள், மரணம் என்பன எவ்வாறு நடைபெறும் என்பதுபற்றி மிகவும் தெளிவாக ஏசாயா 53ஆம் அதிகாரம் முழுவதிலும் எழுதப்பட்டுள்ளது. இது கிறிஸ்து பிறப்பதற்கு 700 வருடங்களுக்கு முன்னதாக எழுதப்பட்டதாகும். மீகா 5:2 ல் கிறிஸ்து பெத்லகேமில் பிறப்பார் எனறும்; சகரியா 9:9 ல் கிறிஸ்து எருசலேமில் கழுதையின்மேல் பிரயாணம் செய்வது பற்றியும்; சகரியா 11:12,13 ல் கிறிஸ்து 30 வெள்ளிக் காசுக்குக் காட்டிக் கொடுக்கப்படுவது பற்றியும், அப்பணத்திற்குக் குயவனது நிலம் வாங்கப்படுவது பற்றியும் கி.மு. 500 வருடங்களுக்கு முன்னே தீர்க்கதரிசிகள் மூலம் தேவன வெளிப்படுத்தியிருந்தார். இத்தீர்க்கதரிசனங்களையெல்லாம் கொண்டிருக்கும் பழைய ஏற்பாட்டுப் புத்தகமே இனறும் யூதரின் வேதபுத்தகமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

புதிய ஏற்பாடு 27 புத்தகங்களைக் கொண்டது. கிறிஸ்துவின் பிறப்பு, போதனைகள், பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் முதலான விடயங்கள் முதல் நான்கு சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டுள்ளன. அப்போஸ்தலர் நடபடியில் கிறிஸ்தவர்களின் ஆரயபகால நடவடிக்கைகள் கூறப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து வரும் 21 புத்தகங்கள் ஆதிகால கிறிஸ்தவர்கள் எப்படி வாழவேண்டுமென்பதைக் குறித்து அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட நிருபங்களாகும். இனி நடக்கப்போகும் காரியங்களைக் குறித்து யோவான் அப்போஸ்தலனுக்கு வெளிப்படுத்தப்பட்ட விடயங்களைக் கடைசிப் புத்தகமாகிய ''வெளிப்படுத்தல்'' கொண்டுள்ளது.

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் இணைந்த புத்தகமாகிய பரிசுத்த வேதாகமத்திலுள்ள 66 புத்தகங்களும் ஒன்றுக்கொன்று இணைந்து இசைவுறற வகையில் எழுதப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு கால கட்டங்களில் ஏறக்குறைய 1600 வருடங்களாக வாழ்ந்த பல்வேறு தீர்க்கதரிசிகளினாலும் பரிசுத்தவான்களினாலும் எழுதப்பட்டுள்ள அனைத்துப் புத்தகங்களும கர்த்தராகிய கிறிஸ்துவின் இரட்சிப்பையும் பரிசுத்த சபையையும் மையமாகக் கொண்டு இசைவான முறையில் எழுதப்பட்டுள்ளதானது மிகவும் ஆச்சரியமான விடயமாக உள்ளது. உலகில் எந்தவொரு புத்தகமும் எக்காலத்திலும் இத்தகையதொரு மேன்மையையும் தகுதியையும் பெறமுடியாது. பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலேயே இவையெல்லாம் எழுதப்பட்டனவாகும். தேவன் பல்வேறு காலகட்டத்திலும் அநேகம் தீர்க்கதரிசிகள் மூலமாக இவ்விதம் வெளிப்படுத்திவந்தபடியினால் இது சாத்தியமாயிற்று. பரிசுத்த பேதுரு இதைக் குறித்துப் பின்வருமாறு எழுதுகின்றார். "தீர்க்கதரிசனமானது: ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். 2 பேதுரு 1:21 இந்த வேத வாக்கியங்களே சபையின் உபதேசத்திற்கும் போதனைக்கும் பிரயோஜனமானவையாகும். இதைக் குறித்து பவுல் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்திற்கும்; சீர்திருத்தலுக்கும்; நீதியைப் படிப்பித்தலுக்கும்; பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கின்றது." 12 தீமோ 3:16,17.

இவ்விதம் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்டுள்ள பரிசுத்த வேதாகமத்திலுள்ள சத்தியத்தை எந்த மனுஷனும் அல்லது தேவதூதர்தானும் மாற்ற முடியாது கலாத்தியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் மத்தியில் சத்தியத்தை மாற்றும் வேத புரட்டர்கள் தோன்றிய போது பவுல் அப்போஸ்தலர் அவர்களுக்குப் பின்வருமாறு கூறுகின்றார் 'வேறொரு சுவிசேஷம் இல்லையே—சிலர் உங்களைக் கலகப்படுத்தி கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல், வேறில்லை. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் நாங்களாவது வானத்திலிருந்து வருகிற தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்... .. ...." கலாத் 1:7-9

மேலும் பாரம்பரியத்தையும் உலக வழக்குகளையும் சேர்ப்பதனால் பரிசுத்த வேதாகமத்திலுள்ள தூய உபதேசங்களை அசுத்தப்படுத்தவும் முடியாது. இத்தகையவர்களைக் கிறிஸ்து "நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனைகளை ஏன் மீறி நடக்கின்றீர்கள்" என எச்சரிக்கின்றார்.

நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கின்றது போலவே பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள வேதவாக்கியங்கள் எல்லாம் மாறாத உறுதியுடையதவைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கர்த்தருடைய வசனமே என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அளிக்கப்பட்டு வருகின்ற வசனம் இதுவே" (பேதுரு 1:25) என பரிசுத்த பேதுரு கூறுகின்றார்.

எந்த ஒரு கிறிஸ்தவ சபையும் பரிசுத்த வேதாகமத்திலுள்ள போதனைகளுடன்

அ. மேலதிக உலக வழக்குகளையும் பாரம்பரியங்களையும் சேர்த்துக் கொள்ளுமாயின் அல்லது

ஆ. மனிதருடைய கற்பனைகளையும் கட்டளைகளாகப் போதிக்குமாயின் அல்லது

இ. வேதவாக்கியங்களைத் திரித்துப் போதிக்குமாயின் அச்சபையானது தேவ சமூகத்தில் சபிக்கப்பட்டதாகவும் விசுவாசத்தை விட்டு விலகிப் போனவர்களின் கூட்டமாகவும் மாத்திரமே இருக்கும். ஏனெனில் "ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகின்றபடி, பிற்காலங்களில் மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினால் சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்" (1தீமோ 4:1) என பரிசுத்த வேதாகமம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

எனவே இதை வாசிக்கும் சகோதரனே! நீ கலப்பற்ற தூய உபதேசத்தைப் போதிக்கின்றதும் ஆதிச்சபை உபதேசங்களில் நிலைத்து நிற்கின்றதுமான பரிசுத்த சபையைக் கண்டடைந்திருக்கிறீரா என்பதைச் சற்று மனம் திறந்து ஆராய்ந்து பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பரிசுத்த வேதாகமம் கூறும் நற்செய்தியையும் சத்தியங்களையும் போதிக்கும் பரிசுத்த சபையைக் கண்டு பிடித்து அதன் மூலம் சீக்கிரம் வரப்போகும் கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்படும்படி துரிதப்படுவதே புத்தியுள்ள செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. தேவன் இருக்கின்றார்

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றது; ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கின்றது." (சங் 19:1) காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றவைகளினாலே உலக முண்டானது முதற் கொண்டு தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை. (ரோமர் 1:20)

மேலே வானத்திலும் கீழே நிலத்திலும் தண்ணீரிலும் இப் பிரபஞ்சம் முழுவதிலுமாக உண்டாகியிருக்கும் எண்ணற்ற உயிரினங்களும், உயிரற்ற சடப்பொருட்களும், அவற்றின் இயக்கங்களும் ஒழுங்கமைப்புகளும், சாதாரண மனிதக் கண்களுக்குத் தென்படாக்கதிர்களும் வான் அலைகளும், தேவனது அநந்த ஞானத்திற்குச் சான்றுகளாகும். இத்தகைய அநந்த ஞான முள்ள சிருஷ்டிகரை அவரது சிருஷ்டியாகிய மனிதன் விளங்கிக் கொள்ளல் இயலாததொன்று. ஆனாலும் அன்பான தேவன் பரிசுத்த வேதாகமத்தின் மூலமாகத் தம்மைப்பற்றிப் பரிசுத்த ஆவியின் மூலம் வெளிப் படுத்தியுள்ளார்.

மனிதன் தனது அறிவு வளர்ச்சியடைவதற்கேற்ப தேவனின் படைப்பிலுள்ள நுட்பங்களை ஓரளவு அறிந்து அதன் மூலம் தன் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டு வருகிறான். இதனால் அவன் பெருமையடைந்து ஆன்மீக வளர்ச்சியில் குன்றிப்போய் தேவனில்லையெனக் கூறிக் கொள்ள முற்படுகின்றான். ஆனாலும் தேவனது சிருஷ்டிகளின் இயக்கங்களையும் ஒழுங்கமைப்புகளையும் அவன் இன்னும் முற்றுமுழுதாக அறிந்தபாடில்லை.

உலகில் தேவனில்லையென்ற கருத்து வலுப்பெறுவதற்கு டார்வின் கார்ல் மார்க்ஸ் போன்றோரின் வெளியீடுகள் பிரதான காரணங்களாக அமைந்தன. மாமேதை டார்வின் அவர்கள் உயிரினங்களின் படிமுறை வளர்ச்சி பற்றிய தமது 'பரிணாம வளர்ச்சிக்' கொள்கையை வெளியிட்டார். ஆரம்பத்தில் தோன்றிய 'ஒருகல உயிரி' யானது பல்வேறு காலகட்டங்களில் பெற்ற உருமாற்றங்கள் மூலமாக வளர்ச்சியடைந்து, இறுதியில் மனிதன் உருவாகினான் என்பதே அவரது கருத்து. இவர் தாம் சென்ற இடங்களில் கண்டறிந்த பல்வகை உயிரினங்களையும், அவற்றின் உயிர்ச் சுவடுகளையும் தொகுத்துப் பார்த்து இவ்வித முடிவுக்கு வந்தார். இவரது கருத்துக்கள் இன்றும் விஞ்ஞானிகள் மத்தியில் கருத்து முரண்பாடுகளுக்குள்ளாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் 'ஒரு கல உயிரி' எவ்வாறு தோற்றம் பெற்றது என்பது பற்றியோ அல்லது உயிர்களின் பரிணாம வளர்ச்சியின் போது உயிரிகளின் ஆண் பெண் இனக் கூறுகள் எவ்வாறு பிரிந்து தனித்தனி வளர்ச்சி பெற்றன என்பது பற்றியோ, டார்வினோ அல்லது அவரது ஆதரவாளர்களோ விளக்கத் தவறி விட்டனர். இயற்கையின் அற்புதத் தோற்றங்களையும், இயக்கங்களையும், அசைவுகளையும் மனிதனின் மகிழ்ச்சிக்கென அன்புத் தேவன் சிருஷ்டித்திருக்கும் போது மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என எண்ணுவது வீண் சிந்தனையாகும்.

கார்ல் மாக்ஸ் அவர்கள் தமது காலத்திய சமூக பொருளாதார இயக்கங்களை ஆராய்ந்து தனது பொதுவுடைமைத் தத்துவத்தை வெளியிட்ட காலத்தில், சமயத் தலைவர்கள் தேவனின் பெயரைச்சொல்லி சாதாரண மக்களைக் கேவலமான முறையில் அடக்கியும் கட்டுப்படுத்தியும், சுரண்டியும் வாழ்ந்து கொண்டிருந்தனர். மேலும் அவர்கள் அரசர்களினதும் முதலாளிகளினதும் கையாட்களைப்போலவும் இயங்கினர். ஏழ்மையிலே வாழ்ந்த கார்ல் மாக்ஸ், சமயத் தலைவர்களின் இத்தகைய ஆடம்பர வாழ்வில் கசப்புற்று சமய நிறுவனங்களை வெறுத்தகற்றும் கொள்கையைக் கொண்டிருந்தார்.

அக் காலத்தில் கிறிஸ்தவ சபைத் தலைவர்கள் கிறிஸ்துவின் போதனைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் வாழ்க்கை நடத்தினர்கள், —ஆனால் கிறிஸ்துவின் போதனையோ என்றும் மாறாதவையாகவும், சத்தியமுள்ளதாகவும்; ஏழைகளுக்கும், பாரஞ்சுமந்து தவிப்போருக்கும் ஆறுதலளிப்பதாகவும் இருந்தது—இருக்கின்றது. ஐசுவரியவான்களுக்கும் வேதபாரகர் போன்ற சமயத்தலைவர்களுக்கும் அவரது போதனைகளும் கசப்பானவையாகவும், எச்சரிக்கையாகவும் அமைந்திருந்தன. ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தினுள் நுழைவது கடினமென்றும்(மாற்கு 10:25) வேதபாரகர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கும் படியும் (மாற் 12:38-40) கிறிஸ்து இயேசு கூறினார்.லாசருவும் ஐசுவரியவானும் பற்றிய விடயத்தையும் இங்கு எடுத்துக் கூறலாம். எனவே கிறிஸ்துவின் போதனைகளைத் தம் கையிலெடுத்து தமக்குச் சாதகமாக்கி —மாய்மாலம் பண்ணிய சமயத் தலைவர்களே கண்டிக்கப் படவேண்டியவர்களாவர். தன் உயிரையே பாவிகளுக்காகத் தியாகம் செய்தவராக— இறுதியில் சிலுவையில் கைகளை விரித்தநிலையில்—தமக்கென ஒன்றுமற்ற நிலையில் —தொங்கினார் கிறிஸ்து! இந்த மகா அன்புக்கு நிகரான தத்துவம் எதுவும் இல்லை.

கார்ல் மாக்ஸ் அவர்கள் வெளியிட்ட "தேவைக்கேற்ற பகிர்வு" என்னும் பொதுவுடைமைத் தத்துவம் இன்னும் எந்த ஒரு நாட்டிலும் செயல் ரூபம் பெறவில்லை. ஏனெனில் ஆன்மீக பக்குவநிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் வரை மனித சமுதாயத்தில் இவ்வமைப்பை ஏற்படுத்தல் இயலக்கூடாததாகும். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் நிறைந்து மக்கள் அனைவரும் தேவ மகிமையை உணர்ந்தவர்களாக மனமாற்றம் பெற்றிருந்த ஆதிச் சபையில், தேவ அன்பினால் நிறைந்திருந்த விசுவாசிகள் அனைவரும் தமக்குண்டான யாவற்றையும் விற்று அவரவர் தேவைக்கு ஏற்பப் பகிர்ந்து கொண்டார்கள் என்பதைக் காண்கின்றோம். (அப் 4:34, 35). எனவே கார்ல் மாக்ஸின் பொதுவுடைமைத் தத்துவமானது தத்துவரீதியாகவும், செயல்ரீதியாகவும் — கிறிஸ்துவின் அன்பிலும் விசுவாசத்திலும் — கிறிஸ்தவ சபை வரலாற்றில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருப்பதைக் காணலாம். எனவே கிறிஸ்தவம் தேவ அன்பினை வெளிப்படுத்தும் ஒரு அனுபவம் நிறைந்த சபையாகும். ஆகவே சமயத்தின் பேரால் சமயத் தலைவர்கள் செய்த தவறுக்காக, தேவன் இல்லை என்று மறுதலிக்க முடியாது. மாமேதை ஐன்ஸ்டின் உலகின் பௌதிக இயக்கங்களை ஆராய்ந்தபின் இவற்றையெல்லாம் இயக்கும் ஒரு பெரும் சக்தி இருப்பதை மறுக்க முடியாது எனக் கூறுகின்றார். பௌத்த மகத்தவர்களும் தேவன் ஒருவர் இருக்கின்றார் என்பதை ஏற்றுக்கொள்வதில்லை. 'கர்மவினை காரணமாக மனிதன் மீண்டும் மீண்டும் மறுபிறவி எடுப்பதாகவும், இதன் காரணமாகவே உலகில் துன்பங்கள் தொடர்வதாகவும், கொல்லாமை முதலான எட்டு நற்கிரியைகளைக் கையாள்வதன் மூலம் ஒருவன் மறு பிறவி எடுக்காது பரிநிர்வாணம் அடையலாம்' எனவும் பௌத்தம் போதிக்கின்றது. 'காரண— விளைவுக்' (Cause and Effect) கோட்பாட்டைக் கொண்ட பௌத்தமானது இப்பிரபஞ்சத்தில் நிகழும் சகல செயல்களும் ஏதோ ஒரு காரணத்தின் விளைவுகளே எனவும், ஒரு காரணத்தினால் ஏற்படும் விளைவானது இன்னொரு விளைவின் காரணமாகின்றது எனவும், இவ்விதமாக எல்லா செயல்களும் சங்கிலித்தொடர் போன்றமைவதாகவும் போதிக்கின்றது. மேலும், ஒரு மனிதனது பிறப்புக்கும் அவனது செயல்களுக்கும் அவனது முற்பிறவியின் வினைகளே காரணமென்றார். உயிர்களின் தோற்றம் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு காரணியின் விளைவே என்றும் விளக்கமளிக்கின்றது.

ஆனால் காரண—விளைவுச் சங்கிலித் தொடரைப் பின்னோக்கி ஆராயும் பொழுது எல்லாவற்றிற்கும் ஆதிமுதலான காரணம் எது? அல்லது முதற்காரணர் யார் என்பதற்குப் பௌத்தம் தெளிவான பதிலை அளிப்பதில்லை. ஆனால் எல்லாவற்றிற்கும் முதற்காரணர் கிறிஸ்துவே என வேதம் விடையளிக்கின்றது ''அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கின்ற''தெனவும் ''அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு எமக்கு உண்டாகிறது'' எனவும் கொலோ (1:14-17)வேதம் கூறுகின்றது.

எனவே அன்பான தேவன் ஒருவர் இருக்கின்றார்; அவரே சகலவற்றையும் சிருஷ்டித்தார்; தமது அன்பின் நிமித்தம் இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவை நமக்குத் தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேவனில்லை என்று மதிகேடன்" சொல்கிறான் என தேவனின் அன்பை அனுபவித்த தாவீதின் வாக்கியங்கள் இங்கு நினைவுகூரத்தக்கவையாகும்.

## 3. ஒன்றான மெய்த்தேவன்

(1) "......சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து"...... (மத்28:19)

(2) "கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தாவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக" ஆமென். (II கொரி 13:14)

(3) "பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்". (1 யோவான் 5:7)

(4) "......நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபா 6:4)

தேவன் ஒருவரே (யாத் 20:2-3, உபா 6:4-5, ஏசா 43:10-13 44:6-8, 45:21-23, I கொரி 8:5-6) என்றும் அவர், ஆள்த்தத்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவராக இருக்கிறார் என்றும் வேதாகமம் (I யோவான் 5:7, மத் 28: 19, II கொரி 13: 14) தெளிவாகக் கூறுகின்றது. பிதா குமாரன், பரிசுத்தஆவியாகிய மூவரும் தனிப்பட்டஆள்த்தத்துவம் உடையவர்களாவர். யோவான் எழுதிய சுவிசேஷம் 17 ம் அதிகாரம் முழுவதிலும் இயேசுக்கிறிஸ்து பிதாவை நோக்கி வேண்டுதல் செய்வதை அவதானிக்கும் போது, பிதாவாகிய தேவன் தனிப்பட்ட ஆள்த்தத்துவத்தில் இருக்கின்றார் என்பதை அறிய முடிகின்றது. பிதாவாகிய தேவன் குமாரனாகிய கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கும் போது (மாற் 1:11, யோவான் 12:28-29) குமாரனாகிய தேவன் தனிப்பட்ட ஆள்த்தத்துவத்தில் இருக்கிறார் எனப் பார்க்கின்றோம். கிறிஸ்துதான் போய் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக (யோவான் 15:26, 16:7-15) கூறும்போது பரிசுத்த ஆவியான தேவன் தனிப்பட்ட ஆள்த்தத்துவத்தில் இருக்கிறார் எனக் காண்கிறோம்.

அதேவேளையில் பரலோகத்திலிருக்கும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய இம்மூவரும் ஒன்றாயிருக்கின்றார்கள். (1 யோவான் 5:7) எனவும் வேதம் கூறுகின்றது. இதனால்தான் கிறிஸ்து பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கும்படி கூறினார். பரிசுத்த பவுல், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் (II கொரி 13:14) ஆசீர்வாதம் கொடுப்பதையும் காண்கின்றோம்.

யோவான் எழுதிய சுவிசேஷம் முதலாம் அதிகாரத்தில் இது மிகவும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. 'ஆதியிலே வார்த்தையிருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது, அவர் ஆதியிலே தேவனோடிருந்தார், அந்த வார்த்தை மாமிசமாகி கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்...... (யோவான் 1:1-18)

இங்கு அந்த வார்த்தை (கிறிஸ்து) தேவனாக இருந்தார் என்றும், அவர் ஆதியில் தேவனோடு (பிதா) இருந்தார் என்றும் கூறப்பட்டிருப்பதை அவதானிக்க வேண்டும். அதாவது அவர் தனித்தும் (தேவனாக) சேர்ந்தும் (தேவனோடு) இருக்கின்றார் எனக் காண்கின்றோம். மேலும், கிறிஸ்துவே மெய்யான தேவன் (1 யோவான் 5:20) என்றும் கிறிஸ்துவே மகா தேவன் (தீத்து 2:13) என்றும், கிறிஸ்துவே சர்வத்திற்கும் மேலான தேவன் (ரோமர் 9:5) என்றும் அவரே நித்தியமானவர் (1 யோவான் 1:2 மீகா 5:2) என்றும் வேதாகமம் தெட்டத்தெளிவாக எடுத்துரைக்கின்றது. கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி பின்வருமாறு கூறுகின்றார். "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன் நித்திய பிதா. சமாதானப்பிரபு எனப்படும்." (ஏசாயா 9:6) யெகோவாவாகிய தேவனைப்பற்றி அவர், வல்லமையுள்ள தேவன் (ஏசாயா 10:21) 'சர்வ வல்லமையுள்ள தேவன்' (ஆதி 17:1) என வேதத்தில் கூறப்பட்டிருப்பதையும் குமாரனாகிய கிறிஸ்துவும் வல்லமையுள்ள தேவன் எனப்படுவதையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பிதா, குமாரனை மனிதனது பாவங்களை இரட்சிப்பதற்காகஅனுப்பினார் என்பதும் குமாரன், தன்னை அதற்கு ஒப்புக்கொடுத்தார் என்பதும், பரிசுத்த ஆவியானவர் பிதாவிலிருந்து புறப்படுவார் என்பதும் வேதாகமம் கூறும் சத்தியங்களாகும் அதாவது ஒன்றான மெய்த்தேவனாகிய தெய்வீக அமைப்பில் பிதா தலையாகவும் கிறிஸ்து கர்த்தரின் வலது கரமாகவும் (ஏசாயா53:1) இருக்கிறார். தெய்வீக சரீரத்தின் அங்கங்கள் (தலையும் கையும்) ஒருமித்துச் செயற்படவேண்டியுள்ளன. மனிதனைக் குறித்து தேவனது நோக்கமும், இரட்சிப்பும், அன்பும் நிறைவேற ஒரே தேவன் மூன்று ஆள்த்தத்துவத்தில் செயற்படவேண்டியது அவசியம் ஆகும்.

பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி வேறொன்றையும் (பிதா) தாமாய்ச் செய்யமாட்டார்......"குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாய் இருக்கிறான். (யோவான் 5:19-23) என கிறிஸ்து தாமே கூறியிருப்பதும், இன்னும் அவர், "நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கின்றோம்" என எடுத்துரைத்துள்ளதும் இவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள் என்பதைக் குறிக்கின்றன. மேலும், தேவனாகிய கிறிஸ்து மாம்சத்தில் பூலோகத்திலிருந்த வேளையில், தேவத்துவத்தில் பரலோகதிலும் இருந்தார் என்பதை "பரலோகத்திலிருந்திறங்கினவரும், பரலோகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருக்கிறவருமான மனுஷகுமாரனே யல்லாமல் பரலோகத்திற்கேறி னவன் ஒருவனுமில்லை''. (யோவான் 3:13) என அவர் கூறிய வசனத் திலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது.

அத்துடன் ''அவர் (கிறிஸ்து) அதரிசனமான தேவனுடைய த்ற் சுரூபமும் சர்வசிருஷ்டிக்கும் முந்தின் பேறுமானவர்...... அவர் எல்லா வற்றிற்கும் முந்தினவர்'' (கொலோ 1:15-17) ''ச்கலமும் அவர் மூல் மாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண் டாகவில்லை'' (யோவான் 1:3) என்னும் வசனங்களிலிருந்து கிறிஸ்துவே ஆதிமுதலான சிருஷ்டிகராகவும் இருக்கிருரெனவும் காண்கிருேம்.

எனவே கிறிஸ்துவே தேவனுகவும், நித்தியராகவும், வார்த்தையா கவும், சிருஷ்டிகராகவும் இருக்கிருர். ஒன்றுன மெய்த்தேவன் ஒருவரே. அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய மூன்று ஆள்த்தத்துவத் தில் உள்ளார் என்பதே சத்தியமாகும். நெருப்பிலிருந்து ஒளியும் (கிறிஸ்து) வெப்பமும் (பரிசுத்தாவி) புறப்பட்டு வெவ்வேறு கிரியைகளைச் செய்வது போல் இத்தெய்வீகம் அமைந்துள்ளதென ஓரளவு விளக்கிக் காட்டலாம்.

கி.பி. நான்காம் நூற்றுண்டில் ஏரியுஸ் என்பார் கிறிஸ்து தேவ னல்ல என்னும் தவறுன போதனை ஒன்றை ஆரம்பித்தார். கி.பி 325 ல் நீசியாவில் கூட்டப்பட்ட பொதுச்சங்கத்தில் இக்கொள்கை கண்டிக்கப் பட்டது. இக்கொள்கையைத்தான் இன்று யெகோவா சாட்சியினரும் கூறிவருகின்றனர். பரிசுத்த வேதாகமம் கிறிஸ்துவின் தெய்வீகத்தன் மையை சந்தேகத்திற்கிடமின்றி எடுத்துரைக்கின்றது. யெகோவா சாட்சியினர் கூறுவதைப்போல் தேவன் ஆள்த்தத்துவத்தில் மூவராயி ருக்கின்றுர். (திரித்துவம்) என்னும் சத்தியம் அஞ்ஞான வேதங்களில் இருந்து பெறப்பட்ட கருத்துக்களல்ல. பரிசுத்த வேதாகமத்தின் மூலம் தேவன் வெளிப்படுத்திய சிருஷ்டிப்பு, அவதாரம், இரட்சிப்பு, பலியாதல் முதலான சத்தியங்களே பிற்காலங்களில் திரிபுபெற்று பிறசமயக் கொள் கைகளாயின.

ஆதியிலேயே, ஏதேன் தோட்டத்தில் கீழ்ப்படியாமையினிமித்தம் ஆதாமும் ஏவாளும் பாவத்தில் வீழ்ந்தபோது, இரக்கமுள்ள தேவன் தம் குமாரனை அனுப்பி சாத்தானது தலையை நசுக்குவதாக வாக்குப் பண்ணியிருந்தார். (ஆதி 3:15) ஆதியில் தேவனேடு சஞ்சரித்த ஆதா முக்கு தேவனைப்பற்றிய சரியான வெளிப்பாடு இருந்தது. அவன் ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டப்பட்ட போதும் அவனும் அவனது சந் ததியினரும் திரித்துவம், குமாரனின் அவதாரம் முதலானவற்றைப் பற்றிச் சரியான அறிவைப் பெற்றிருந்தனர். நோவாவின் தகப்பனுகிய லாமேக்கு என்பான் ஆதாமின் மகன் சேத்தை அறிந்திருந்தான். தேவ னேடு சஞ்சரித்த நோவாவிற்கு தேவனையும், தேவனது சித்தத்தையும், பற்றி சரியான அறிவு இருந்தது. ஜலப்பிரளயத்தின் பின்பு ஜனங்கள் பெருகி 'பாபேல்' கோபுரம் கட்டும்போது ஏற்பட்ட மொழிப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினுல் உலகெங்கும் சிதறிச்சென்றனர். அவ்விதம் சிதறிச் சென்ற போது நோவா மூலம் பரம்பரைபரம்பரையாக 'வாய்மொழி' மூலம் பெற்ற திரித்துவம், சிருஷ்டிப்பு, பலியிடுதல், குமாரனின் அவதாரம் முதலான ஆதிச் சத்தியங்களையும் தம்முடன் எடுத்துச் சென்றனர். இவ்விதம் சிதறிச் சென்ற மக்கள் ஆரம்பத்தில் யூபிரதீஸ், தைக்கிறீஸ் நைல்நதி, இந்துநதி, குவாங்கோநதி முதலான நதிக்கரைகளில் குடியேறி ஆதிநதிக்கரை நாகரிகங்களை வளர்த்தனர். மக்கள் தாம் குடியேறிய இடங்களுக்கு எடுத்துச் சென்ற ஆதிச்சத்தியங்களை வாய்மொழி மூல மாகவே அடுத்த பரம்பரைக்கு மாற்றியபடியினுல் அவை பல்வேறு திரிபு களைப் பெற்று அவர்கள் வாழ்ந்த சூழலுக்கு ஒத்ததான சமயக்கருத் துக்களாக வளர்ச்சிபெறலாயின.

இவ்விதமாக ஆதி நாகரீகங்கள் வளர்ச்சிபெற்ற இந்திய, எகிப்திய பாபிலோனிய, சீன நதிப்பள்ளத்தாக்குகளில் மனிதர் தம் குற்றங்களுக் காகப் பலியிடும்முறை காணப்பட்டது. ஜலப்பிரளயத்தின் பின் நோவா பலியிட்டான். அதன் பின் ஜனங்களும் தாம் சென்ற இடங்களில் பலி யிடத் தொடங்கினர். இதனுல் புற ஜாதியினர் பலியிடுவதைப் பார்த் துத்தான் தேவன் மோசேக்கு நியாயப்பிரமாணத்தில் பலியிடும்படி கட் டளை கொடுத்தார். என நாம் கருதுவோமாயின் அது புத்தியீனமான தாகும்.

ஆபிரகாம் பாபிலோனியாவிலிருந்து கானுன் சென்ற போது பாபி லோனியச் சொற்களையும் எபிரேய மொழியில் அறிமுகப்படுத்தியிருந்த தாகப் பார்க்கிருேம். நோவா பாபிலோனியா மொழியில் ''ஷ்னு ''Ish-Nu என அழைக்கப்பட்டான். 'ஷ்' (Ish) என்பது மனிதனையும் 'ஷ்ஷா' Isha என்பது மனுசியையும் குறிக்கின்றது. Ish-Nu என்பது 'நோவா மனி தன்' என்பதாகும். இது பிற்காலத்தில் வடஇந்தியாவில் சமஸ்கிருத, மொழியில் முன் எழுத்துடன் V-Ish-Nu என்ருகியது. மத்சா புராணத் தில் [Matsa purana] விஷ்ணு தனது மனைவியுடன் உலகம் வெள்ளத் தினுல் அழிக்கப்படும்போது நீரின்மேல் மிதந்துகொண்டிருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே விஷ்ணு என்பவர் நோவா என வர லாற்ருசிரியர் குறிப்பிடுகின்றனர். சகல இந்து அவதாரங்களும் விஷ் ணுவுடன் தொடர்புடையனவாகவே அமைந்துள்ளன. தேவனது அவ தாரம் பற்றி நோவா வெளியிட்ட சத்தியங்கள் வாய்மொழி மூலமாக திரிபு பெற்று இவ்விதம் ஆகின. இச்சத்தியமானது சீனுவிலும், யப்பானி லும், எகிப்திலும் மேலும் திரிபுபெற்று அங்கு வாழ்ந்த புகழ்பெற்ற மன்னர்களெல்லாம் தேவபுத்திரர் என அழைக்கப்படலாயினர்.

மேலும், ஒரு கன்னிகை மூலம் தேவன் அவதரிப்பார் என்னும் விடயத்தைத் தீர்க்கதரிசிகள் மூலம் தேவன் ஏற்கனவே வெளிப்படுத் தியிருந்தார். இச்சத்தியமானது பின்பு பிற இடங்களுக்கும் பரவி திரிபு பெற்று விட்டது. இது தொடர்பாக உருவான கிரேக்க, இந்து புராணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் பல உள்ளன. 'டானே' தனிமையில் இருக்கும் போது அவ ளின் மேல் இறங்கிய பொன்மழையினுல் அவள் 'பெர்சியூசை' கருத் தரித்தாள் என்றும், குந்திதேவி சூரியனுக்குக் கர்ணனை கர்ப்பம்தரித் தாள் என்றும் கூறும் கதைகள் இவற்றுள் சிலவாகும். 'செயுஸ்' தேவ னின் குழந்தையான 'ஹெர்குலிஸ்' பற்றிய கதைகள் கன்னிகை மூலம் தேவஅவதாரம் இடம் பெறும் என்னும் ஆதிநம்பிக்கையின் மோசமான திரிபுக் கதைகளே. கிறிஸ்து கன்னிகை மூலம் அவதரித்த சத்தியத்தை இஸ்லாமியரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

இதைப்போன்றுதான் திரித்துவம் பற்றிய சத்தியம் வாய்மொழி மூலமாக திரிபுபெற்று இந்தியா போன்ற கீழ்த்திசை நாடுகளில் மூன்று தேவர்கள் பற்றிய கொள்கைகளாக வளர்ச்சிபெறலாயிற்று. இந்துக் கோயில் கட்டிட அமைப்புக்கள் ஏறக்குறைய நியாயப்பிரமாண ஒழுங் குப்படி கட்டப்பட்டுள்ளதானது யூதருக்கும் இந்துக்களுக்கும் உள்ள தொடர்பினைக் காட்டுகின்றது. வட இந்தியப் பிராமணர்கள், பாபி லோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்ட யூதர்களின் வழித்தோன்றல்களென் றும் வரலாற்றுசிரியர்கள் குறிப்பிடுவதையும் இங்கு கவனித்தல் அவ சியம். ஆபிரகாம் அரபுமொழியில் 'இப்ராகிம்' [Ibrahim] எனப்படு கின்றுர். சிறைப்பட்ட யூதர்கள் தம்மை ஆபிரகாமின் வழித் தோன்றல்களெனப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தனர். இவர்களின் சந்ததியினர் வட இந்தியாவிற்குச் செல்லும்போது சமஸ்கிருத மொழி யில் முதலெழுத்தான 'I' யினைவிட்டு (I) Brahim—Brahmin என அழைக் கப்படலாயினர். இவ்விதம் பிராமணர் என்னும் பெயர் வரலாயிற்று.

எண்ணற்ற வரலாற்று ஆதாரங்கள் இருக்கின்றன; தேவனுடைய ஆவியின் ஏவுதலினுல் எழுதப்பட்ட பரிசுத்த வேதாகமம் கூறும் சத்தி யங்கள் இருக்கின்றன, மோசேக்கு இச்சத்தியங்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விதம் சகல ஆதாரங்களும் இருக்கும் போது திரித்துவம், அவதாரம், பலி பற்றிய கருத்துக்கள் அஞ்ஞான வேதங்களி லிருந்து பெறப்பட்டவை எனக் கூறுவதும் அறிவீனமாகும்.

தேவன் ஒருவரே, அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக மூன்று ஆள்த்தத்துவத்தில் இருக்கின்றுர். அன்பான தேவன்—ஒன்றுன மெய்த தேவன்—மனித சமுதாயத்தைப் பாவத்தில் இருந்து மீட்க மனிதனுக அவதரித்தார் என்பது சத்தியமாகும்.

## 4. அன்பான தேவன்

"தேவன் அன்பாகவே இருக்கிறுர். நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினுல் அல்ல; அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாபங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரப் பலியாகத் தம்முடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரனை அனுப்பினதினால் அன்பு உண்டாயிருக்கின்றது. (1யோவான் 4:8-10)

ஆதியிலே தேவன் தமது அன்பு வெளிப்படும்படியாக தமது சாயலாக மனிதனைச் சிருஷ்டித்தார். (ஆதி 1:26, 5:1) ஆனாலும் அவனோ சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு மாமிசத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றினால் (1 யோவான் 2:16, ஆதி 3:6) தேவகட்டளையை மீறினான். தேவநீதியின் படி பாவத்திற்குத் தண்டனை வழங்கப்படவேண்டியதாயிற்று. ஆனாலும் அன்பான தேவன் மனிதன் மேல் இரக்கம் கொண்டார். மனிதன் செய்யும் பாவத்திற்கு அவனிலும் மேலான ஒருவர் மேல் அத்தண்டனையை ஏற்றி மனிதனைப் பாவத்திலும் சாபத்திலுமிருந்து விடுதலையாக்கச் சித்தங் கொண்டார். இவ்விதமாக "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.'' [யோவான் 3:16]

ஆதாமும், ஏவாளும் தேவகட்டளையை மீறிய பின்பு அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்துவதற்கு முன்னதாகவே அவர் மனிதன் மீது இரக்கங்கொண்டார். அதனால்தான் அங்கே, தன் குமாரனை உலகுக்கு அனுப்பி சாத்தானின் தலையை நசுக்குவதாக வாக்குப்பண்ணினார். "உனக்கும் ஸ்திரிக்கும் உன் வித்திற்கும் அவள் வித்திற்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிக்காலை நசுக்குவாய் என்றார்.'' (ஆதி 3;15)

எனவே அன்பான தேவன் தன் குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பும் பொருட்டாக உலகில் ஒரு மக்கள் கூட்டத்தை ஆயத்தப்படுத்தி, அவர்கள் மத்தியில் தீர்க்கதரிசிகள் மூலமாகத் தம் சித்தத்தை வெளிப்படுத்தி வந்தார். ஆபிரகாமின் சந்ததியாகிய இஸ்ரவேலரைத் தேவன் இவ்விதம் ஆயத்தப்படுத்தி, அவர்களது வாழ்க்கை வரலாறு முழுவதையும் [பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளவை] வரப்போகும் மேசியாவாகிய கிறிஸ்துவின் பாடுகளுக்கும், புதிய ஏற்பாட்டு பரிசுத்த சபைக்கும் திருஷ்டாந்தமாக இருக்கும் வகையில் வழிநடத்தினார்.

தீர்க்கதரிசிகள் மூலமாக முன் குறித்திருந்தபடி, காலங்கள் நிறைவேறின போது குறித்த காலத்தில் கன்னிகை மூலமாக நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பூமியில் அவதரித்து மனிதருடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தினார். "அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களால் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.'' (யோவான் 1:12)

அன்பான தேவனால் பூலோகத்திலுள்ளோருக்கு அளிக்கப்பட்ட இம் மாபெரும் நற்செய்தி பரிசுத்த வேதாகமம் முழுவதிலும் இழையோடியிருக்கும் அற்புதத்தை அதனை வாசிப்போர் யாவரும் அறிந்து கொள்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி II

# கிறிஸ்துவின் பரிசுத்த சபையும் சத்தியங்களும்

'கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத்தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்''

– எபேசியர் 5;27

நீ வெட்கப்படாத ஊழியக்காரனும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு'' -II தீமோத்தேயு 2:15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. கிறிஸ்துவின் பரிசுத்த சபை

பெந்தகோஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியினுல் எருசலேமில் சபை தாபிக்கப்பட்ட பின்பு அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் கட்டளைப்படி சர்வ சிருஷ்டிகளுக்கும் நற்செய்தியைப் பிரசங்கிக்கலாயினர். கிறிஸ்துவுக்குள் மனமாற்றம் பெற்று இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் கூட்டிச் சேர்த்துக் கொண்டு வந்தார். (அப் 2 : 47) இவ்விதம் சேர்க்கப்பட்ட பரிசுத்த சபையானது மனிதனது பொருளாதார சமூக அல்லது அரசியல் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமல்ல. ஆனல் இது மகா மேன்மையானதும் இயேசுக்கிறிஸ்துவினுடையதுமான சபையாகும். இது இயேசுக்கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டதாகவும் அவரது சரீரமாகவும், அவரது மணவாட்டியாகவும் தேவனது வாசஸ்தலமாகவும், பரிசுத்தவான்களின் கூட்டமாகவும் இருக்கின்றது. எனவே பரிசுத்த சபையானது, உலக காரியங்களில் ஈடுபாடு கொண்டு தன்னை அசுசிப் படுத்திக்கொள்ளாத படிக்கு விழிப்புள்ளதாக இருந்து, கர்த்தராகிய இயேசுவின் இரண்டாவது வருகைக்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

இது இயேசுக்கிறிஸ்துவின் சரீரமாகவும் இருக்கின்றது. இச்சபைக்கு கிறிஸ்து தாமே தலையாகவும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற விசுவாசிகள் அதன் அங்கங்களாகவும் இருக்கின்றனர். (ரோமர் 12 ; 5 : 3 I கொரி 12 ; 12, எபேசி 4 ; 4, 12, 16) எல்லாவற்றையும் எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினுர்.

மேலும் பரிசுத்த சபையானது கிறிஸ்துவினது மணவாட்டியாகவும் இருக்கின்றது. "...... அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ...... கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். (" எபே 5 ; 25–27, வெளி 19 : 8–9, 21 : 2)

இன்னும் பரிசுத்த சபையானது பாதாளத்தின் வாசல்களினுல் மேற்கொள்ளப்படாத கிறிஸ்து என்னும் உறுதியான கற்பாறைமேல் கட்டப்பட்டுள்ளது. ஏனெனில் கிறிஸ்துவே சபைக்கு மூலைக்கல்லாகவும் (மாற்கு 12 : 10, மத் 21 ; 42, லூக் 20 : 17, எபேசி 2 : 20, 1 பேதுரு 2 : 4–6, மத் 16 : 18, ஏசாயா 28 : 16) அஸ்திபாரமாகவும் (I கொரி 3 : 11) கன்மலையாகவும் (1 கொரி 10 : 4, ரோமர் 9 : 33, 2 சாமு 22 : 2) இருக்கின்றார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்த சபையானது தேவனுடைய வாசஸ்தலமாகவும் இருக்கின்றது. அவர்மேல் (கிறிஸ்து) மாளிகை முழுவதும் இசைவாக இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகின்றது. அவர்மேல் நீங்களும் ஆவியினலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகின்றீர்கள். (எபேசியர் 2 : 21 , 22)

எனவே பரிசுத்த சபையானது கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டதாகவும் அவரது சரீரமாகவும், அவரது மணவாட்டியாகவும், தேவனது வாசஸ்தலமாகவும், பரிசுத்தவான்களது கூட்டமாகவும்(1 பேதுரு 2 : 9) இருப்பதனுல் கிறிஸ்துவின் சித்தத்தை நிறைவேற்றுவது மாத்திரமே சபையின் ஊழியக்காரருடையதும், விசுவாசிகளுடையதும் கடமையாகவுள்ளது.

இத்தகைய பரிசுத்த சபையின் ஜீவன் சத்தியவசனமே, தேவன் பரிசுத்த சபையாரை சத்திய வசனத்தின் மூலம் ஜனிப்பித்து அதன் மூலமே பரிசுத்தமாக்கி முற்றிலும் தேறிய நிலைக்கு வளர்த்துக் கொண்டு வருகின்ருர். "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினுலே ஜனிப்பித்தார்" (யாக் 1:18) (எபே 5:26) என்று வேதம் கூறுகின்றது. நீங்கள் வளரும்படி புதிதாகப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேதுரு 2 : 2) என பேதுரு சபையாரைக் கேட்டுக்கொள்ளுகின்ருர். எனவே பரிசுத்த வேதாகமத்திலுள்ள சத்திய வசனங்கள் மாத்திரமே சபையை வழிநடத்துவதாகவும் சபைக்கு ஜீவனளிப்பதாகவும் இருக்கின்றது என நாம் பார்க்கின்ருேம்.

நற்செய்தியை சர்வசிருஷ்டிக்கும் போதிப்பது சபையின் பிரதான கடமைகளில் ஒன்ருகும். (மாற்கு 16 : 15) மேலும் தேவனுடன் ஒப்புரவாகுதலின் உபதேசத்தை அளிப்பதும் (II கொரி 5 : 19) தேவனுடைய இரகசியங்களை வெளிப்படுத்துவதும் (1 கொரி 3 : 1-2) சபையின் கடமைகளாகும். இறுதியாக "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்" என (எபேசி 2 : 7ல்) கூறப்பட்டுள்ள படியும், "பிரியமானவர்களே இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்ருேம். இனி எவ்விதமாய் இருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதனுல், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கின்ருேம்" (1 யோவான் 3 : 2) என அப்போஸ்தலன் யோவான் கூறுவது போலவும், இயேசுக்கிறிஸ்துவின் முழுநிறைவான வளர்ச்சிக்கு விசுவாசிகளை வழிப்படுத்தி அவரது மகிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய வருகையில் காணப்படும் படியாக அவைவரையும் வழிநடத்தித் தகுதியாக்குவதும் பரிசுத்தசபையின் கடமையாக உள்ளது, இத்தகைய குணாதிசயங்களைக் கொண்ட பரிசுத்த சபை எது?

கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகள் வரை உலகின் பல்வேறு பாகங்களிலும் உருவாக்கப்பட்டிருந்த சபைகள் முன் கூறியபடியே கிறிஸ்துவுக்குள் ஏகசிந்தையுடையவைகளாகவும் பரிசுத்த ஆவியின் வரங்களினால் நிறைந்தவைகளாகவும், கர்த்தரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தவைகளாகவும் விசுவாசிகளை கர்த்தரின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்துவதிலேயே கவனம் செலுத்துபவைகளாகவும் இருந்தன. பரிசுத்த யோவானுக்குத் தேவன் இனிவரும் காலங்களில் நடைபெறப்போகும் சம்பவங்கள் பற்றி வெளிப்படுத்திய தரிசனங்களில் இத்தகைய பரிசுத்தசபை மகிமை பொருந்திய ஸ்திரீயாகக் காட்டப்படுகின்றது. வெளிப்படுத்தல் 12ம் அதிகாரம் முழுவதிலுமாகக் காட்டப்பட்டுள்ள பரிசுத்த ஸ்திரீ இப் பரிசுத்த சபையைக் குறிப்பதாகும்.

பரிசுத்த சபை கிறிஸ்துவின் மணவாட்டிக்கு (எபேசி 5:25-27, வெளி 19:8,-9, 2,1:2) ஒப்பிடப்பட்டுள்ளது. ஒரு மனைவி தன் புருஷனை விட்டு வேறொருவனை நாடுவாளாகில் அவள் வேசி எனப்படுகின்றாள். இதைப் போலவே கிறிஸ்துவையே சிந்தையாகக் கொண்டு உலகிலிருந்து வேறு பிரிந்து ஜீவிக்க வேண்டிய மணவாட்டியான பரிசுத்த சபையானது கி. பி. 3ம் நூற்றாண்டின் பின்பு படிப்படியாக உலக ஆடம்பரங்களையும், கிரியைகளையும், பாரம்பரியங்களையும் கைக்கொள்ளும்படி உலகத்துக்குரியசிந்தையுடையதாய் கிறிஸ்து என்னும் மணவாளனை அலட்சியப் படுத்தஆரம்பித்து விட்டது. வெளிப்படுத்தல் 17ம் அதிகாரம் முழுவதிலுமாகக் காட்டப்பட்டுள்ள கெட்டுப்போன ஸ்திரி உலகத்தோடு சோரம் போன இத்தகைய சபையைக் குறிப்பதாகும்.

பரிசுத்த சபையானது அப்போஸ்தலர் காலத்தில் ஆவிக்குரிய வரங்களினால் நிறைந்திருந்து மணவாளனாகிய கிறிஸ்துவின் சிந்தையாக இருந்ததைப் போலவே, பிற்காலங்களில் உலகத்தோடு சேர்ந்துவிட்ட சபைகள் ஆதிக்கம் செலுத்திய காலங்களில் கூட, வெவ்வேறு இடங்களிலும் பரிசுத்த சபையின் போதனைகள் காணப்படும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் ஆங்காங்கு பல்வேறு காலகட்டங்களிலும் கிரியை செய்து கொண்டிருந்தார். பேர் பெற்ற பெரிய சபைகள் உலகத்தோடு சோரம் போய் கெட்டுப்போன போதிலும் இரக்கமுள்ள தேவன் இக் கடைசிக்காலத்தில் மணவாட்டியான சபைகளை மீண்டும் உயிர்ப்பளித்துள்ளார். இன்று பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்று கிறிஸ்து இயேசுவின் சிந்தையுடையனவாய்இயங்கும் பரிசுத்த சபைகள் என்னதான் இடர்கள் வந்தாலும், ஜீவனுக்குப் போகும் இடுக்கமான வாசலைக் கண்டு அதனையே நாடிச் செல்வோருக்கு வழிகாட்டும் வெளிச்ச வீடுகளாக இருக்கின்றன. இத்தகைய பரிசுத்த சபை கடைப்பிடிக்கும் வேதசத்தியங்கள் அடுத்த அத்தியாயத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. பரிசுத்த வேதாகமம் கூறும் சத்தியங்கள்

இப்பகுதியில் பரிசுத்த வேதாகமம் கூறும் சத்தியங்கள் சத்திய வசனங்களின் துணையுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவையே ஆதிச்சபை போதித்த சத்தியங்களாகும். குறித்துக் காட்டப்பட்டுள்ள சத்திய சபைகளை பரிசுத்த வேதாகமத்தின் துணையுடன் வாசித்தறிந்து உண்மையைக் கண்டறிதல் உத்தமமானது. இச்சத்தியங்களை ஏற்றுக் கொள்ளாத எந்த ஒரு சபையும் கிறிஸ்துவின் மணவாட்டி சபைக்குத் தகுதியற்றனவாகும்.

## 1. தேவனிடத்திற்கு மனந்திரும்புதல்

பாவஜீவியத்தின் அருவருப்புக்களை விட்டு விலகி இரட்சிப்புக்கு ஏதுவாக தேவனிடத்திற்குச் செல்லுதல் மனந்திரும்புதல் எனப்படுகின்றது. "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகின்றது: லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகின்றது" (2 கொரி 7:10) "அது முதல் இயேசு : மனந்திரும்புங்கள்; பரலோகராச்சியம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" (மத் 4:17, சங் 51: 17, ஏசாயா 55!7, மாற்கு 1:15, அப் 3.20)

## 2. ஒப்புரவாகுதல்

இது (1) சகோதரனுடன் ஒப்புரவாகுதலையும் (2) தேவனோடு ஒப்புரவாகுதலையும் குறிக்கின்றது. நமது கர்த்தரின் போதனையாதெனில் "முன்பு உன் சகோதரனோடு ஒப்புரவாகி பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" என்பதாகும். மத் 5:23, 24; 18: 35; லூக்கா 19:8,9; எசேக் 33 :15; லேவி 6:4.

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து மூலமாக தேவனுடன் ஒப்புரவாக்கப் படுகின்றோம். "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" ரோமர் 5:10, 2 கொரி 5: 18-20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நீதிமானுக்கப்படுதல்

தேவனுடைய மிகுந்த கிருபையினுலே- அவருடைய கிருபாதார பலியின் மூலமாக - நாம் பாவத்திலிருந்து மீட்கப்பட்டு அவருக்கு முன்பாக பாவங்களற்ற நீதிமான்களாக்கப்படுதலையே இது குறிக்கின்றது. கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக ஒருவன் நீதிமானுக்கப்படுகின்முன். ரோமர் 3:22. "எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய்; அவருடைய கிருபையினுலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகின்ருேம்". ரோ 3:23, 24 யோவா 1:12,13;3:3, 16; அப் 10:43; 13: 39; ரோமர் 3:22-26; ரோ 5:1; 1 கொரி 6:11; 2 கொரி 5:17, கலாத்தியர் 3:24; 1 பேதுரு 1: 23, தீத்து 3:5,6.

4. பரிசுத்தமாகுதல்

தேவ வசனத்திற்கு உண்மையுடன் கீழ்ப்படியும்போது நாம் பரிசுத்தமாக்கப்படுகின்ருேம். யோவா 17 : 15-17 2 கொரி 7 : 1, எபேசி 5 : 25 – 27, 1 தெச 4 : 3, எபிரேயர் 2 : 11; 12 : 14, 13:12, 1 பேதுரு 1 : 16, 1 யோவான் 1 : 7

5. முழுக்கு ஞானஸ்நானம்

விசுவாசமுள்ளவனுகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். (மாற்கு 16 : 16) என்றும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினுலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்களென்றும் (மத் 28 : 19) இயேசு கூறினுர். மனம் திரும்பியவர்களுக்கு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் கொடுக்கப்படுகின்றது. (அப் 2 ; 38) மேலும் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்களாக இருக்கின்றனர். (கலா 3 ; 27) பாவத்திற்கு மரித்தவன் அடக்கம் பண்ணப்பட்டு நீதிக்குப் பிழைக்கும் புதிய மனிதனுக எழுந்திருக்கும் அடையாளமாகவே மனந்திரும்பி விசுவாசிப்பவர்களுக்கு மாத்திரம் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படுகின்றது. அதாவது நீரினுள் அமிழும்போது பாவ மனிதன் அடக்கம் பண்ணப்படுகின்முன். நீரினுள் இருந்து எழும்பும்போது கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த புதிய மனிதன் எழுந்திருக்கின்முன். இதனுல் தான் இயேசு "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தைக் காணமாட்டான்" (யோவான் 3 : 3) எனக் கூறியதுடன் அவர் தாமே எல்லா நீதியையும் நிறைவேற்றும் படிக்கு யோர்தான் நதியில் ஜலத்திலிறங்கி ஞானஸ்நானம் பெற்முர். (மத் 3:15 – 17, மாற் 1 : 9, 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மனந்திரும்பி விசுவாசிப்பவர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்படும் முழுக்கு ஞானஸ்நானமே சத்திய வசனத்திற்கு ஏற்றதாகும். மத் 28 : 19, அப் 2 : 37, 41 ; 8, 12 ; 37, 38 ; 10 : 48, 1 பேதுரு 3 : 21. (8ம் அதிகாரம் 7ம் பிரிவைப் பார்க்க)

6. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்

"எனக்குப்பின் வருகிறவர் ...... பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத் 3 : 11) என யோவான் ஸ்நானகன் கூறுகின்றார். "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 3 : 5 ) என இயேசு கூறினார். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அந்நிய பாஷை அடையாளத்துடன் கிடைக்கின்றது. அப் 2 : 4; 10 : 45; 46; 19 : 6; 1 கொரி 14 : 2, 21; ஏசா 28 : 11; மாற்கு 16 : 17. இவ் அபிஷேகம் உன்னதத்திலிருந்து வரும் பெலனினால் தரிப்பிக்கப்படுவதைக் குறிக்கின்றது. லூக் 24 : 49; அப் 1 : 5; யோவான் 7 : 38, 39 பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின்போது அவர் எம்முடனே கூட என்றென்றும் இருக்கும்படியாக வருகின்றார். (யோவான் 14 ; 16, 17)

அன்பான தேவன் ஆதிச்சபையில் பொழிந்தருளியதைப் போல இக்காலத்திலும் உலகெங்கும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அந்நிய பாஷை அடையாளத்துடனே கூட பொழிந்தருளுவது அனைவரும் அறிந்த விடயமாகும். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறாது எந்த ஒரு மனிதனாலும் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது (யோவான் 3 : 5) கிறிஸ்து பரலோகம் சென்றபின் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக பரிசுத்த ஆவியினால் விசுவாசிகள் ஊழியக்காரருக்குள் வாசமாக இருந்து சகல சத்தியத்திற்குள்ளும் சபையை நடத்தி வருகின்றார். (யோவான் 16 : 13)

7. தெய்வீக சுகம்

"நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" (யாத் 15 : 26) என தேவன் தமது ஜனங்களுக்கு வாக்களித்துள்ளார். "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாகி அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும் படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். (யாக் 5 : 14, 15, 16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8 : 11) என வேதம் கூறுகின்றது.

கர்த்தராகிய இயேசு தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு நமது நோய்களைச் சுமந்தார். (மத் 8 : 17, ஏசாயா 53 : 5; பேதுரு 2 : 24) கிறிஸ்து தாமே நோயாளிகளைக் குணமாக்கியதுடன் தமது சீடர்களுக்கும் அவ்விதம் செய்யும்படி கட்டளையிட்டார். (மத் 12 ; 15, 10 : 8; லூக்கா 10 : 9, மாற்கு 16 ; 18, இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறுதவராக இருப்பதுடன் உலக முடிவு பரியந்தமும் எங்களோடு கூட இருப்பதாகவும் வாக்குப் பண்ணியுள்ளார். தேவ ஜனங்கள் சுகத்திற்காக வேண்டுதல் செய்து வியாதியிலிருந்து விடுதலை பெற்ற பல சந்தர்ப்பங்களை புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் காணலாம். ஆதி 20 ; 7. 17, 18; எண்ண 12 ; 13, 15, 1 இராஜா 13:6, 2 இராஜா 5:10-14; யாத்தி 15:26; சங் 103:3.

8. கர்த்தரின் இராப்போசனம்

தமது மரணத்தை தமது வருகை வரை நினைவு கூரும்படியாக இயேசு கர்த்தரின் இராப் போசனத்தை ஏற்படுத்தினர். 1 கொரி 11 : 23 – 33 லூக்கா 22 : 17 - 20 கர்த்தருடைய சரீரம் இன்னதென நிதானித்து அறிந்து பங்கு பெறுவதனால் இதன் மூலம் எமக்கு ஆரோக்கியம் கிடைக்கின்றது. 1 கொரி 11 : 29, 30.

9. குழந்தைகளை அர்ப்பணம் செய்தல்

தாய்மார் தம் குழந்தைகளை இயேசுவிடம் கொண்டுவந்தபோது அவர் அவர்களை அணைத்துக் கொண்டு அவர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார். மாற்கு 10 :16. இதைப் போலவே குழந்தைகளையும் நாம் அர்ப்பணிக்கின்றோம். லூக்கா 2: 27, 28.

10. ஊழியம்:–

சுவிசேஷ ஊழியக்காரர் இவ்வுலகில் தமக்கென எந்தச் சொத்துக்களையும் வைத்துக் கொண்டிருக்க முடியாது. லேவியர் கர்த்தருடைய பெட்டியைச் சுமந்துகொண்டிருந்ததினால் அவர்கள் எதையும் சுதந்திரமாகக் கொண்டிருக்கவில்லை. (உபாக10 : 8 –9)

கிறிஸ்து 'எவனுகிலும் தன்னுடைய மாம்ச சம்பந்தங்களை வெறுத்து தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்து விடாவிட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்' என்றார் (லூக் 14: 26 -33; உபா 33: 8-10) இத்தகைய பிரதிஷ்டையின் நோக்கம் பற்றி மத் 19 : 21ல் தெளிவாக் கூறப்பட்டுள்ளது. இது தேவ ஊழியருக்கு மிகவும் அவசியமானதாகும். லூக் 9: 57 -62; 2 தீமோ 2:4.

11. விவாகரத்து இல்லை

திருமணம் வாழ்க்கை முழுவதும் நீடிக்கும் ஒன்றாகும். கிறிஸ்துவின் இக் கட்டளையின்படி விபசாரத்தின் நிமித்தம் மாத்திரம் இருவரும் பிரிந்திருக்கலாம். ஆனாலும் ஒருவர் வாழும் வரை இன்னொருவர் மறுமணம் செய்ய முடியாது. மத் 5: 31, 32, 19:3 - 9, ரோமர் 7;3, மாற்கு 10 : 11, 12 லூக் 16: 18.

12. கிறிஸ்துவின் இரண்டாவது வருகை

நமது கர்த்தர் எழுந்தருளிப் போனதைப் போலவே அவரது வருகையும் இருக்கும். அப் 1: 9 , 11. இது மூன்று பகுதியாக நடைபெறும். முதலாவது கிறிஸ்துவுக்குள் பரிபூரண வளர்ச்சியடைந்து அவருக்காகக் காத்திருக்கும் மணவாட்டியை அழைத்துச் செல்லுவதற்காக மத்திய ஆகாயத்தில் தோன்றுதல். கொலோ 1: 28, 1 தெச 4: 15 –18, வெளி 12: 5 –6. இதுவே முதற்பலமானவர்களின் மீட்பு எனப்படுகின்றது (ரோமர் 8 ;23 ) தமக்காக ஆவலுடன் காத்திருப்பவர்களுக்கு மாத்திரம் அவர் தோன்றுவர். (எபி 9 : 28)

இரண்டாவது: முதல் 3½ வருட உபத்திரவ கால முடிவில் கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருந்து இரத்த சாட்சிகளாய் மரித்தவர்களுக்காக வருதல். இது அறுவடை எனப்படுகிறது. வெளி 14:14 - 16, 7:9 -14 மத் 24 :29 –31

மூன்றாவது: மகா உபத்திரவ காலத்தின் முடிவில் சகல ஜனங்களும் பார்க்கத்தக்க வகையில் அவரது வருகை இருக்கும். 2 தெச 1:9 9, 10. பூமியில் தனது ராஜ்யத்தை நிறுத்துவதற்காகவும் தேவனை அறியாதவர்களை நியாயந்திர்க்கவும் வருகிறார். சகரியா 14 :4, 5. வெளி 19 :11 - 19

13. ஆயிரம் வருஷ ஆட்சி

இயேசுக்கிறிஸ்து தமது சகல பரிசுத்தவான்களோடும் கூட பூமியில் 1000 வருடம் அரசாளுவார். இக் காலத்தில் சாத்தான் கட்டப்பட்டிருக்கும். இது சமாதானமும் ஆசிர்வாதமுமான ஆட்சியாக இருக்கும். வெளி 20 : 2-6, ஏசாயா 2 : 2-4, 11 : 6-9, 65 : 25, ஓசியா 2: 18, சகரியா 14 : 9-20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. வெள்ளைச் சிங்காசன நியாயத் தீர்ப்பு**

ஆயிரம் வருஷ அரசாட்சியின் பின் பொதுவான உயிர்த்தெழுதல் சம்பவிக்கும். அப்போது தேவன் மரித்தவர்களையும் ஜீவனோடிருக்கிறவர்களையும் அவரவர் கிரியைக்குத் தக்கபடி நியாயந் தீர்ப்பார். வெளி *20 : 11-15*, அப் *10 :42*.

**15. புதிய வானமும் புதிய பூமியும்**

ஆயிரம் வருஷ அரசாட்சியின் பின்பு இவ்வானமும் பூமியும் ஒழிந்து போம். அதன் பின்பு தேவன் புதிய வானத்தையும் புதிய பூமியையும் ஏற்படுத்துவார். வெளி *21 :1–4*. இனி மரணமும் துக்கமும் இருப்பதில்லை. தேவன் தாமே அங்கு வாசமாயிருப்பார். ஏசாயா *65 : 17*, *66 : 22*, *2* பேது *3 : 12, 13*.

**16. நித்திய நரகமும் நித்திய மோட்சமும்**

நீதிமான்கள் நித்திய ஜீவனை அடையவும் பாவிகள் நித்திய ஆக்கினை அடையவும் போவார்கள். பரலோகராஜ்யம் சதாகாலங்களிலும் நிலை நிற்பது போலவே நரகமும் சதாகாலங்களிலும் நிலைத்து நிற்கும் மத் *25 : 41-46*, வெளி *14 : 10–11*, மத் *13 : 42*, மாற்கு *9 : 43, 44*; லூக் *16 : 24*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி III

# கிறிஸ்தவ சபைகளின் வரலாறும் தவறான உபதேசங்களும்

"......நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்?......" கலாத் 3:1

"......அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும்." II திமோத்தேயு 4:3,4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. கிறிஸ்தவ சபைகளின் வரலாறு

பெந்தெக்கோஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியினாலே எருசலேமில் சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு அப்போஸ்தலர்கள் ரோம சாம்ராச்சியம் முழுவதிலும், உலகின் பிற பாகங்களிலும் சுற்றித் திரிந்து கிறிஸ்துவின் கட்டளைப்படி சர்வசிருஷ்டிகளுக்கும் நற்செய்தியைப் பிரசங்கிக்கலாயினர். கி. பி. 3ம் நூற்றாண்டுவரை கிறிஸ்துவை அறியாத ரோமைப் பேரரசர்கள் கிறிஸ்துவின் பரிசுத்த சபையை அழிக்கும்படிக்கு விசுவாசிகளை மிருகங்களுக்கு இரையாக்கியும், சுட்டெரித்தும், சொல்லொண்ணா சித்திரவதைகளுக்கு உட்படுத்தியும் வந்தனர். ஆனாலும் சபையானது கிறிஸ்துவின் மணவாட்டிக்குரிய இலட்சணங்களைக் கொண்டதாயும், பரிசுத்த ஆவியானவரின் பலத்த கிரியைகளைக் கொண்டதாயும் இருந்த படியினால் சபையின் வளர்ச்சியை எவராலும் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. இக்காலத்தில் சபையானது பரிசுத்த வேதாகமத்திலுள்ள சத்திய வசனங்களுக்கு ஒத்ததான போதனைகளையே உபதேசித்தது (1பேதுரு 2:2) உலக பாரம்பரியங்களோ அல்லது பரிசுத்த வேதாகமத்திற்குப் புறம்பான ஆசார முறைகளோ சபைக்குள் ஏற்கப்படவில்லை.

பரிசுத்த ஆவியானவரின் பலத்த கிரியைகள் சபையில் காணப்பட்டபடியினால், ரோமைப் பேரரசர்கள் இறுதியில் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. கி. பி. 310ம் ஆண்டளவில் ரோமைப பேரரசனா கொன்ஸ்தந்தைன் கிறிஸ்தவனானான். அரசன் விசுவாசியானதும் அரசனைப் பிரியப்படுத்துவதற்காக சாம்ராச்சியத்தின் பிரபுக்களும், பிரசைகளும் கிறிஸ்தவர்களாகத் தொடங்கினர். ஆனால் இவர்கள் "ஜலத்தினாலும் ஆவியினாலும்" மறுபடியும் பிறந்த (யோவான் 3:5) அனுபவமில்லாத வெறும் பெயர்க் கிறிஸ்தவர்களாகவே சேர்ந்து கொண்டனர். இதன் காரணமாக சபை தனது பரிசுத்த தன்மையை இழக்கலாயிற்று. புதிதாகச் சேர்ந்துகொண்டவர்கள் தமது பழைய மார்க்கத்திலிருந்த வழக்கு முறைகளையும் சபைக்குள் கொண்டுவரத் தொடங்கினர். இதனைக் கட்டுப்படுத்த முடியாமற் போனபோது, சபைத் தலைவர்களாக இருந்தவர்கள், இவ்வழக்கு முறைகளுக்கு கிறிஸ்தவ உருக் கொடுக்கலாயினர். படிப்படியாக உலக பாரம்பரியங்களும், வழக்கு முறைகளும் சத்திய வசனங்களுக்கு முரணான ஆசார முறைகளும் சபையில் புகுத்தப்பட்டன. இவ்விதமாக சபை உலகத்து மணவாளனாகிய பிசாசுக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டது. மணவாளன் இயேசுக்கிறிஸ்துவின் போதனைகளும், அப்போஸ்தலரது வழிநடத்தல்களும் அலட்சியம் செய்யப்பட்டன. பரிசுத்த ஆவியானவரின் வரங்களும் நின்று போயிற்று. ரோமைச் சபை உலக சபையாயிற்று. அது வெளிப்படுத்தல் 17ம் அதிகாரத்தில் கூறப்பட்ட ஸ்திரிக்கு ஒத்ததாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் ரோமைப் பேரரசின் பல பாகங்களிலும் இருந்த நகரங்களில் அப்போஸ்தலரினால் ஏற்படுத்தப்பட்ட சபைகள், சுயமாகவே இயங்கி வந்தன. உதாரணமாக பிலிப்பி, தெசலோனிக்கே, கொரிந்து, பெர்கமு போன்றன இத்தகைய சில சபைகளாம். ஆனால், ரோம சபையின் தலைவர்கள் கி. பி. 5ம் நூற்றாண்டில் பிற இடங்களில் இருந்த சபைகளையும் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்டனர். இதனைப் பல சபைகள் எதிர்த்த போதும், அவை பலாத்காரமாக ரோமைச் சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. இவ்விதமாக ரோமன் கத்தோலிக்க சபை உருவாகியது. "அனைத்துலகத்துக்குமுரியது" என அர்த்தமுடைய கத்தோலிக்கம் என்ற சொல்லும் அது ரோமைச் சபையில் ஆரம்பித்தபடியினால் "ரோமன் கத்தோலிக்கம்" என்னும் பெயரும் இவ்விதமே உருவாகியது. இவ்விதமாக ரோமச்சபையினால் ஏற்கனவே ஏற்கப்பட்டிருந்த உலகத்து ஆசார முறைகளான பூசைகள், திருவிழாக்கள், விக்கிரகங்களைச் செய்தல், சிருஷ்டிகளாகிய பரிசுத்தவான்களை வணங்குதல், மரித்தவர்களுக்காக பூசை நற்கிருத்தியங்கள் செய்தல் முதலான உலக ஆசார முறைகள் மெல்லமாக பிற இடங்களிலிருந்த சபைகளிலும் புகுத்தப்பட்டன. குழந்தைகளுக்குத் தண்ணீர் தெளித்து ஞானஸ்நானம் கொடுக்கும் முறை கி.பி 8ம் நூற்றாண்டிலே ஏற்கப்பட்டது. அதுவரை கிறிஸ்துவை ஒருவர் விசுவாசித்து ஏற்றுக்கொண்டபின்பு அவருக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறையே அங்கீகரிக்கப்பட்டது.

இவ்விதமாக படிப்படியாக சத்திய வசனத்திற்குப் பொருந்தாத அநேக கோட்பாடுகளும் உலக வழக்குகளும் சபைக்குள் புகுத்தப்பட்டதனாலும், சபைத் தலைவர்கள், குருமார்கள் மத்தியில் ஊழல்களும் ஒழுக்கக் கேடுகளும் சீர்கேடுகளும் ஏற்பட்டதனாலும் சபைக்குள் எதிர்ப்புக்கள் வலுப்பெறலாயிற்று. ஒழுங்கீனங்கள் கட்டுமீறிச் செல்லவே சத்திய வசனத்தின்படி நடக்க முற்பட்ட கூட்டத்தினர் தத்தம் நாடுகளில் ரோமன் கத்தோலிக்கத்தை விட்டு வேறு பிரிந்து சென்றனர்.

இதனைத் தொடர்ந்து பெருமளவு பரிசுத்தவான்கள் 15ம் நூற்றாண்டுக் காலத்தில் ரோமன் கத்தோலிக்க சபைத் தலைவர்களினால் கொலை செய்யப்பட்டனர். (வெளிப்படுத்தல் 17:6) ஆனாலும் பின்பு, ரோமன் கத்தோலிக்க சபைத் தலைவர்கள் தம்மைச் சீர்திருத்திக் கொண்டு சத்திய வசனத்தின்படி நடப்பதற்கு முயன்றாலும் அவர்கள் இன்றுவரை தமது பாரம்பரிய சடங்காசாரங்களைக் கைவிட முடியாதுள்ளனர்.

பொதுவாக சபை வரலாற்றினைப் பார்க்கும்போது ஆதிச்சபையின் பரிசுத்தமானது படிப்படியாகச் சீர்கெட்டுப் போய், பின்பு மத்தியகாலத்தில் ஏற்பட்ட மதசீர்திருத்த முயற்சிகளுடன் பரிசுத்த சபைக்குரிய போதனைகள் படிப்படியாக மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவின் வருகை நெருங்கியுள்ள இக்கடைசிக் காலத்தில் ஆதிச் சபையின் பரிசுத்த போதனைகளைக் கொண்ட மணவாட்டி சபையானது மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ் வளர்ச்சி முறையினை வரலாற்றுக் கட்டங்களாகப் பிரித்து நோக்கினல் இலகுவில் விளங்கிக் கொள்ளலாம்.

(1) கி. பி முதல் மூன்று நூற்றுண்டுகள் பரிசுத்த சபையானது மணவாட்டி சபைக்குரிய போதனைகளையும் அதற்கேற்ற சீவியத்தையும் கொண்ட உபத்திரவத்தின் பாதையில் சென்ற காலகட்டமாகும்.

(2) கி. பி. நான்காம் நூற்றுண்டு தொடக்கம் 8ம் நூற்றுண்டு வரையுள்ள காலப்பகுதியில் பரிசுத்த சபையானது கிறிஸ்துவை விட்டு விலகி படிப்படியாக குழந்தை ஞானஸ்நானம், விக்கிரகாராதனை, சிருஷ்டிகளை வணங்குதல் முதலான தவறான போதனைகளுக்கு இடம் கொடுக்கத் தொடங்கியது. இக்காலத்தில் இத்தகைய பிழையான கோட்பாடுகளுக்கெதிராக பல்வேறு இடங்களிலும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டபோதிலும் அவை காலகெதியில் வலுவிழந்து விட்டன. இக்காலத்திலேயே ரோமச் சபைக்குக் கண்காணியாக இருந்தவர்கள் தம்மைப் "பாப்பு" என அழைக்கத் தொடங்கினர். அத்துடன் ஏனைய சபைகளெல்லாம் தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கவேண்டுமென வற் புறுத்தினர். ரோமச் சபை ரோமன் கத்தோலிக்க சபை என பெயர் மாற்றப்பட்டது. கொன்ஸ்தாந்திநோப்பிளைத் தலைநகராகக் கொண்ட கிழக்குப் பிரதேச சபைகள் பாப்புவின் தலைமைத்துவத்தை ஏற்காது கிரேக்க சபை என தம்மை அழைத்துக் கொண்டன. இவ்விதமாக இருபெரும் சமயப் பிரிவுகள் தோன்றின. ஆனாலும் இவ் இரு சபைக ளும் கிறிஸ்துவின் போதனைகளிலிருந்து பெருமளவு விலகிச் சென்று கொண்டிருந்தன. இக்காலகட்டத்தின் ஆரம்பத்தில் "ஏரியுஸ்" என் பார் கிறிஸ்து தேவனல்ல என்னும் கொள்கையைப் போதிக்கத் தொடங்கினுர். இக்கொள்கை அக்காலத்தில் ஏற்கப்படவில்லை. இத னையே இன்றைய யெகோவா சாட்சியினர் போதித்து வருகின்றனர்.

(3) 9ம் நூற்றுண்டு தொடக்கம் 15ம் நூற்றுண்டு வரையுள்ள காலப்பகுதி சபை வரலாற்றில் இருள் சூழ்ந்த காலமாகும். இக்காலத் தில் மேற்கூறிய இரு சமயங்களிலும் கிறிஸ்துவுக்கு விரோதமான போதனைகள் நிறைந்திருந்ததுடன் சமயத் தலைவர்கள் அரசர்களைப் போல நடந்து பொதுமக்களைப் பெரும் இன்னலுக்குட்படுத்தினர். 15ம் நூற்றுண்டில் ரோமன் கத்தோலிக்க சபையின் ஊழல்கள் அகற் றப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெறலாயிற்று.

(4) 16 ம் நூற்றுண்டு தொடக்கம் 19 ம் நூற்றுண்டு வரையுள்ள காலப்பகுதியில் மதச் சீர்திருத்தமும் அதனைத் தொடர்ந்து பரிசுத்த வேதாகமத்தை சுதந்திரமாக மக்கள் பின்பற்றும் வசதியும் ஏற்படுத் தப்பட்டது. பாப்புவின் பாவமன்னிப்புப் பத்திர விற்பனை, மதகுருமாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்கேடான வாழ்க்கை முதலானவை, தூய்மையான கிறிஸ்தவ போதனைகள் வேண்டுமென்ற கிறிஸ்தவர்களின் போக்கைத் தீவிரப்படுத்தியது. 1517ல் மாட்டின் லூதர் விட்டன் பேர்க் தேவாலயத்தில் வெளியிட்ட 96 கேள்விகள் கொண்ட வினாக் கொத்துடன் இவ் எதிர்ப்பு உச்சக் கட்டத்தை அடைந்தது. இவற்றினை அடுத்து ஏற்பட்ட மதப் போர்களில் பெருந்தொகை மக்கள் மாண்டனர். கிறிஸ்துவின் போதனைகளைக் கடைப்பிடிக்க முற்பட்ட பெருந்தொகை மக்கள் ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து வெளியேறி தம் தம் நாடுகளில் கிறிஸ்தவ சபைகளை ஏற்படுத்திக் கொண்டனர். இச் சபைகளே புரட்டஸ்தாந்து சபைகளென அழைக்கப்பட்டன. லூதரன், கல்வினிசம், பிறிஸ்பிரேறியன், அங்கிலிகன் முதலான அநேகம் சபைகள் இவ்விதம் ஆரம்பித்தனவாகும். இச் சபைகள் ஆரம்பத்தில் பல்வேறு உபத்திரவங்கள் மத்தியில் செல்ல வேண்டி ஏற்பட்டது. விக்கிரக ஆராதனை, சிருஷ்டிகள் வணக்கம், மரித்தோருக்கு பூசைகள் செய்தல் முதலான சீர்கேடுகளை விட்டு இவர்கள் பிரிந்து கிறிஸ்துவை மாத்திரம் ஆராதனை செய்து வந்தனர். ஆனாலும், நாளடைவில் இவர்கள் தமது அன்றாட ஜீவியத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றாது, பெயர்க் கிறிஸ்தவர்களாக மாத்திரம் வாழத் தலைப்பட்டனர்.

இச் காலத்திலேயே வில்லியம் மில்லர் என்பார் ஏழாம்நாள் ஓய்வுக்காரரது கொள்கைகளைப் போதிக்கத் தொடங்கினர். சனிக்கிழமையை ஓய்வு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற நியாயப் பிரமாணத்தைப் பின்பற்ற வேண்டுமென்பது இவர்களது பிரதான கோட்பாடாகும். இது கிறிஸ்துவின் இரட்சிப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற பூரண ஒப்புரவாகுதலை மறுக்கும் ஒரு கோட்பாடாகும்.

இத்தகைய நிலையில் 19ம் நூற்றாண்டில் வெஸ்லி, மூடி முதலான அநேகம் பிரசித்தி பெற்ற சுவிஷேகர்கள் எழும்பி கிறிஸ்துவை வல்லமையுடன் பிரசிங்கிக்கத் தொடங்கினர். வெஸ்லியின் முயற்சியில் உருவாக்கப்பட்டதே. மெதடிஸ்த சபையாகும். வெஸ்லி அந்நிய பாஷை அடையாளத்துடன் பரிசுத்த ஆவியில் நிறைந்து செபித்து பிரசங்கங்கள் செய்த போதிலும், மெதடிஸ்த சபையினர் இன்று அந்நிய பாஷை அடையாளத்துடன் கூடிய பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினை ஏற்க மறுக்கின்றனர்.

19 ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் முழுக்கு ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் (அந்நிய பாஷை அடையாளத்துடன்) பற்றிய ஆதிச் சபையின் போதனைகள் மீண்டும் புதுப்பிக்கப்படலாயின இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மாம்சப் பிரகாரமான இஸ்ரவேலர் தம் நாட்டிற்கு (இஸ்ரேல்) செல்ல ஆரம்பித்ததையும், ஆவிக்குரிய இஸ்ரவேலர் (பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று கிறிஸ்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் பரிசுத்த சபையைச் சேர்ந்தோர்) பல்வேறு நாடுகளிலும் ஆதிக் கிறிஸ்தவர்களைப் போன்று கிரியை செய்ய ஆரம்பிப்பதையும் குறிப்பிடுதல் பொருத்தமாகும். பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நெருங்கிவிட்டதற்குரிய அடையாளங்களே இவையாகும்.

(5) இவ்விதமாக, இருபதாம் நூற்றுண்டில் ஆதிச் சபையின் போதனைகளைக் கொண்ட பெந்தெக்கோஸ்தே சபைகளைத் தேவன் மீண்டும் ஏற்படுத்தச் சித்தங் கொண்டார். கிறிஸ்து காலத்திய பரிசுத்த சபையின் போதனைகள் மீண்டும் வல்லமையாக உலகமெங்கும் இந் நூற்றுண்டில் போதிக்கப்பட்டு வருகின்றது. தமது எல்லாத் தேவைகளுக்கும் முற்று முழுதாக கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவையே நம்பியிருக்கும் ஊழியக்காரரையும், விசுவாசிகளையும் கொண்ட மணவாட்டி சபை இந்நூற்றுண்டில் கர்த்தரால் மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. இன்று அன்பான தேவன், தாம் வாக்களித்திருந்தபடி சகல மாம்சங்களின் மேலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெருமழையாக ஊற்றத் தொடங்கியுள்ளார். இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். 'உலக முடிவு பரியந்தம் உங்களோடு கூட இருக்கிறேன்' என்று கூறியவர் உண்மையுள்ளவராக இருக்கின்றார். மணவாளனாகிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது (1 தெச 4 : 16, 17) அவரது வருகைக்காகக் காத்திருக்கும் மணவாட்டியாகிய கறைதிரையற்ற பரிசுத்த சபை மாத்திரமே (எபேசி 5:27) எடுத்துக் கொள்ளப்படும். இதுவே ஆதி அப்போஸ்தலர்கால சபையுமாகும். (கலாத் 1:7-9; யூதா 1 )

## 8. தவறான உபதேசங்கள்

வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது. (நீதி 28:9) கர்த்தருடைய புத்தகத்தில் தேடி வாசியுங்கள், இவைகளில் ஒன்றும் குறையாது. இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது, அவருடைய வாய் இதைச் சொல்லிற்று. அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். (ஏசாயா 34:16)

பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளதான சத்தியங்களுக்கு ஒவ்வாத பல தவறான உபதேசங்கள் இன்று அநேகம் கிறிஸ்தவ சபைகளினால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு கிறிஸ்தவ சபைகளையும் சேர்ந்த மக்கள், தாம் குறிப்பிட்ட சபையைச் சேர்ந்த பெற்றோர்களிடத்தில் பிறந்திருப்பதன் காரணமாக அச் சபைகளின் சடாசாரங்களைப் பின்பற்றுபவர்களாகவும் மத வைராக்கியம் உடையவர்களாகவும் இருக்கின்றனர். இன்னும் பலர் எல்லாச் சபைகளும் ஒன்று தான் என்ற அலட்சிய மனப்பான்மையுடன் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் இவர்கள் பரிசுத்த வேதாகமத்தினை வாசித்து விளங்கியவர்களாக காணப்படுவதில்லை.

கிறிஸ்துவின் போதனைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதும், ஆதிச் சபையில் கடைப்பிடிக்கப்படாததும், தற்போதுள்ள சில கிறிஸ்தவ சபைகளில் கடைப்பிடிக்கப்படுவதுமான சில தவறான உபதேசங்கள் மாத்திரம் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவை தவறான உபதேசங்கள் தான் என்பதற்கு பரிசுத்த வேதாகமத்தில் ஏராளமான ஆதாரங்கள் இருந்த போதிலும், குறிப்பிட்ட முக்கியமான வசனங்கள் மாத்திரம் தான் ஆதாரமாக காட்டப்பட்டுள்ளன.

மெய்யான தேவனையும் பரிசுத்த சபையையும் கண்டறிந்து அனுபவிக்க வாஞ்சையாயிருக்கும் மக்கள், இப் பகுதியினை செபத்துடனும் நிதானத்துடனும், பரிசுத்த வேதாகமத்தின் உதவியுடனும், வாசித்து விளங்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அ. பாரம்பரியம்

இன்று பலர் தமது சபை பழைமை வாய்ந்ததென்றும், தாம் பாரம்பரியமாக சேர்த்துக்கொண்ட சடங்கு முறைகளையும்,வணக்க முறைகளையும் விட்டுவிடமுடியாதெனவும் பெருமையுடன் கூறிக்கொள்கின்றனர். கிறிஸ்து பிறந்து இரண்டாயிரம் வருடங்களாகி விட்டதனால் காலத்திற்கேற்ப மாறுதல்கள் அவசியம் எனவும் கூறுகின்றனர்.

ஆனாலும் இயேசுக் கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும்,மாறாதவர் என்பதையும், 'இதோ லகம் முடிவுபரியந்தம் உங்களோடு இருக்கிறேன்' என அவர் கூறியதையும் இவர்கள் ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை.

கி.மு 1500ம் ஆண்டளவில் இஸ்ரவேலருக்கு மோசே மூலமாக தேவன் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்திருந்தார். ஆனால் பின்பு கிறிஸ்து உலகத்தில் ஜீவித்த நாட்களில் வேதபாரகரும், பரிசேயரும்மோசேயின் நியாயப்பிரமாணத்தைத் தமக்கு சாதகமாகத் திரித்து விளக்கி வந்தனர். நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதற்கும் கிறிஸ்துவின் பிறப்பிற்கும் இடைப்பட்ட ஆயிரத்தைநூறு வருட காலத்தில் இஸ்ரவேலர் நியாயப்பிரமாணத்துடன் பாரம்பரியங்களையும் சேர்த்துக் கொண்டனர். நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டு 1500 வருடங்களின் பின்பு கிறிஸ்து வேதபாரகரை நோக்கி ''நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்'' என்றும், 'உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்'. (மத் 15:3-9) என்றும் வன்மையாக கண்டிக்கிறார்.மேலும் அவர் ''மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்'' என்ற ஏசாயாவின் வசனத்தை எடுத்துக்காட்டி கண்டிப்பதையும் இங்கு காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் குறித்து ஆமோஸ் தீர்க்கதரிசி "அவர்கள் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, அவருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளாமல், தங்கள் பிதாக்கள் பின்பற்றின பொய்களினுல் மோசம் போனுர்களே" ஆமோஸ் 2 : 4) என பரிதபிக்கின்றுர். இதைப்போலவே கிறிஸ்துவின் போதனைகளையும் தற்போது 2000 வருடங்கள் சென்றுலும் பாரம் பரியத்தின் மூலம் அசுசிப்படுத்த முடியாது. ஏனென்றுல் அவர் மாரு தவர், உலகம் முடிவுபரியந்தம் நம்மோடிருப்பதாக வாக்குப்பண்ணியவர்.

கிறிஸ்துவின் போதனைகளுடன் மனிதருடைய கற்பனைகளும் உப தேசங்களாக சேர்க்கப்பட்டு அதன் மூலம் தேவனுடைய கற்பனைகள் அவமாக்கப்பட்டு வருகின்றதை உண்மைக் கிறிஸ்தவன் எவனும் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

## ஆ. பரிசுத்த சபை மனிதன் மேல் கட்டப்படமுடியுமா?

"எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகி, இலவ சமாய் அவருடைய கிருபையினுலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகின்றேம்'! (ரோமர் 3 : 23 - 24)

"......ஒரே மனுஷனுலே (ஆதாம்) பாவமும், பாவத்தினுலே மர ணமும் உலகத்தில் பிரவேசித்தது போலவும் எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியினுல் மரணம் எல்லோருக்கும் வந்தது போலவும்......". (ரோமர் 5 : 12)

ஆதாம் பாவத்தில் விழுந்ததன் நிமித்தமாக பாவமும், மரணமும் உலகத்தில் பிரவேசித்தது என்று பார்க்கின்றேம். அதாவது பாதாளத் தின் வாசல்கள் (பசாசின் சோதனை) மனிதனை மேற்கொண்டதனுல் எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானுர்கள். இங்கு பாவம் செய்ததனுல் எல்லா மனுஷரையும் பாதாளம் மேற்கொண்டது என காண்கின்றேம். இத்தகைய மாயைக்கு ஒப்பான மனிதனிடத்தில் (சங் 144 ; 4) நம்பிக்கை வைத்து கர்த்தரை விட்டு விலகுகின்றவன் சபிக் கப்பட்டவன் (எரே 14:5) என வேதம் கூறுகின்றது.

பேதுரு, தமது முதலாம் நிருபத்தில் "இயேசுகிறிஸ்து ...... தமது மிகுந்த இரக்கத்தின் படியே நம்மை மறுபடியும் ஜெனிப்பித்தார். '(1பே துரு1 : 4)என கூறுகின்றுர். அதாவது பாவியாயிருந்த தன்னையும் கிறிஸ்து இரட்சித்தார் என அறிக்கையிடுவதைக் காண்கின்றேம். சாதாரண மனிதனுகிய பேதுரு பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவதற்கு (அப் 1 : 1 - 3) முன்பு கிறிஸ்துவை மறு தலித்தும் சபித்தும் (மத் 26 : 69-74) தவறிழைத்ததையும், பின்பு அந்தி யாக்கியாவில் குற்றமிழைத்ததையும் (கலா 2 : 11 - 13) காண்கின் றேம். இந்தப் பேதுருவை இயேசு "அப்பாலே போ சாத்தானே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் (மத் 1 16 : 23) "அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப் பட்டாய்" (மத் . 14 : 31) என்றும் கடிந்து கொள்வதைக் காண்கிறோம். இவ்விதம் பாதாளத்தின் வாசல்களினுல் பல தடவை மேற்கொள்ளப் பட்ட மனிதனுகிய பேதுருவின் மேல் சபை கட்டப்பட்டிருக்குமாயின், அந்தச்சபை எப்படி பாதாளத்தால் மேற்கொள்ளப்படாத மூலைக் கல்லாகவிருக்கும், கிறிஸ்துவினுடைய மணவாட்டி சபையாக இருக்க முடியும்? அப்படிப்பட்ட ஒரு சபை கிறிஸ்துவின் சரீரமாகவும் அதற்குக் கிறிஸ்து தலையாகவும் இருக்கமுடியுமா என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

மனிதனுக அவதரித்த கர்த்தராகிய கிறிஸ்து ஒருவரே பாவம் செய்யாதவராகவும், பாதாளத்தின் வாசல்களால் மேற்கொள்ளப்படா தவராகவும் இருந்தார். இவரைப் பற்றி பேதுரு அப்போஸ்தலனுர் 'அவர் பாவஞ்செய்யவில்லை அவருடைய வாயில்வஞ்சனை காணப்படவில்லை (1 பேதுரு 2:22) என எழுதியுள்ளதைக் காண்கிறோம். எனவே பாதாளத்தின் வாசல்களால் மேற்கொள்ளப்படமுடியாத கிறிஸ்துவின் மேலேயே சபை கட்டப்பட்டுள்ளதென்பதை வேதம் மிகவும் தெளிவாகக் குறிப்பிடுவதைக் காணலாம்.

ஜீவனுள்ள கல்லும் மூலைக்கல்லும் கிறிஸ்துதான் என்பதை அப்போஸ்தலனுகிய பேதுரு தாமே தமது நிருபத்தில் (1 பேதுரு 2:4-6) தெளிவாக எடுத்துரைத்துள்ளதை அவதானிக்குக. கிறிஸ்து தாமே சபைக்கு மூலைக்கல்லாக (மாற்கு 12:10, மத் 21:42, லூக் 20:17 எபேசி 2:20-22, 1 பேதுரு 2:4-6) இருக்கின்ருர். கிறிஸ்துவாகிய இந்த மூலைக்கல் தான் சபைக்கு திட அஸ்திபாரமாக வைக்கப்பட்டிருக்கும் கல். (ஏசாயா 28:16) போடப்பட்ட அஸ்திபாரமாகிய கிறிஸ்துவையல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனுலும் கூடாது. (கொரி 3:11) என பரிசுத்த பவுல் கூறுகிருர் எனவே நமது கர்த்தராகிய கிறிஸ்து பாவம் செய்யாதவராகவும், பாதாளத்தின் வாசல்களினுல் மேற்கொள்ளபடாதவராகவும் இருப்பதனுல் இவர் மேலேயே சபை கட்டப்படுகிறது. இவரே பரிசுத்த சபையின் மூலைக்கல்லாகவும் அஸ்திபாரமாகவும், கன்மலையாகவும் (1கொரி 10:4, 2சாமு 22:2, ரோமர் 9:33) இருக்கின்ருர்.

பரிசுத்த வேதம் இவ்விதம் கூறியிருக்க சாதாரண மனிதனுகிய பேதுருவின் மேல் சபை கட்டப்பட்டுள்ளதென கூறுவது வெறும் அபத்தமும் வஞ்சனையுமான தேவதுரோகமாகும். இக் கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டப்படும் ஒரேயொரு வேத வசனத்தை இவ்விடத்தில் எடுத்துக்காட்டுதல் பொருந்தமானதாகும்.

சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து" என்ருன். இயேசு அவனை நோக்கி மேலும் "நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குச் சொல்லுகின்றேன். நீ பேதுருவாய் இருக்கின்றாய். இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை '' ( மத் 16:16-18 ).

இங்கு கிறிஸ்து, பேதுரு (Petros-சிறுகல்) இந்தக் கல்,(Petra-பெருங் கற்பாறை) என்னும் இருவேறு சொற்களைப் பயன்படுத்தியுள்ளதைக் கவனிக்குக. "நீ பேதுருவாய் இருக்கின்றாய். இந்தப் பேதுருவின் மேல் என் சபையைக் கட்டுவேன்'' என அவர் கூறவில்லை. "இந்தக் கல்லின் மேல்'' என்று குறிப்பிடுவது தான் இங்கு அவதானிக்க வேண்டியதாகும் புதிய ஏற்பாடு எழுதப்பட்டுள்ள மூலபாஷையாகிய கிரேக்க பாஷையில் Petros, Petra என்னும் இரு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிரேக்க பாஷையில் Petros என்றால் சிறுகல் என்றும் Petra என்றால் பெருங்கற்பாறை என்றும் அர்த்தமாகும்.

'விசுவசிப்பவன் ஒவ்வொருவனும் ஒரு ஜீவனுள்ள கல்லாகச் சேர்ந்து ஆவிக்கேற்ற தேவமாளிகை கட்டப்படுவதாக பேதுரு (1பேதுரு 2:5) சொல்வதைக் காண்கின்றோம். எபேசி 2:20-22 இலும் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு பேதுரு மாத்திரமே 'நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து' என விசுவாசித்தான். எனவே கிறிஸ்து அவனை பேதுரு ( Petros – சிறுகல் ) எனக் குறிப்பிட்டார்; ஏனெனில் அவன் ஒரு விசுவாசி. ஒவ்வொரு விசுவாசியும் ஒரு கல். பின்பு தன்னைக் குறித்து (நீ அறிக்கையிட்டு ஏற்றுக்கொண்ட) இந்தக் கல் ( Petra - பெருங்கற் பாறை ) லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்றார். கிறிஸ்து வேறொரு சந்தர்ப்பத்தில் "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள்'' (யோ 2:19-21) எனத் தன்னைக் குறித்துக் கூறியதையும் அவதானிக்குக. எனவே இந்தக் கல் என்பது கிறிஸ்துவையே குறிக்கின்றது.

எனவே சபை எந்த ஒரு மனிதன் மேலும் கட்டப்படவில்லை. அது கிறிஸ்துவாகிய கன்மலையின்மேல்தான் கட்டப்பட்டுள்ளதென்பது தெளிவாகின்றது.

## இ. பரிசுத்தவான்கள் பரலோகத்தில் (விண்ணரசு) இருக்கின்றனரா?

பரலோகத்திலிருந்திறங்கினவரும், பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை. (யோ 3:13) என இயேசு தெளிவாகக் கூறியுள்ளார். பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை என நமது கர்த்தராகிய இயேசு கூறியிருப்பதனால் அவருடைய இரண்டாவது வருகை வரை அல்லது வெள்ளைச் சிங்காசன நியாயத் தீர்ப்பின் நாள்வரை, மரித்த பரிசுத்தவான்கள் வேறு ஒரு இடத்தில் இளைப்பாறிக் கொண்டிருப்பதாக தெரிகின்றது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்து தமது சீஷர்களுக்கு "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு...... ஒரு ஸ்தலத்தை உங்களுக்கு ஆயத்தம் பண்ணப்போகின்றேன்...... ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்" யோவான் 14:2-3 எனக் கூறுகின்றார். மேலும் யோவான் அப்போஸ்தலர் வெளிப்படுத்தலில் பின்வருமாறு கூறுகின்றார். "பின்பு, நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்து போயின...... யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்திலின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது." வெளி 21:2-3.

இங்கு ஆயத்தமாக்கப்பட்டிருந்த புதிய எருசலமும், புதிய வானமும், புதிய பூமியும் ஆகிய மூன்று இடங்கள் கூறப்படுகின்றன. புதிய எருசலேம் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து, பரிசுத்தமாக்கப்பட்டு, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு வந்த பூரண பரிசுத்தவான்களுக்கென ஆயத்தமாக்கப்பட்டதாகும். இப் பரிசுத்தவான்களே கிறிஸ்துவாகிய மணவாளனுக்காகக் காத்திருந்த மணவாட்டியாவர்.

புதிய வானமும் புதிய பூமியும் புதிய எருசலேமை விட மகிமையில் குறைந்த இடங்களாகும். ஏனெனில், இவை புதிய எருசலேமைப் போன்று அலங்கரிக்கப்பட்டு ஆயத்தமாக்கப்பட்டிருக்கவில்லை. புதிய எருசலேமே பரலோக ராச்சியமாகும். ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தவர்கள் மாத்திரமே இதனுள் உட்பிரவேசிப்பர். (யோவான் 3:5). ஜலத்தினால் மாத்திரம் மறுபடியும் பிறந்தவர்கள் பரலோக ராச்சியத்தைக் காண்பார்கள் (யோவான் 3:3); ஆனால் உட்பிரவேசிக்கமாட்டார்கள். எனவே, இத்தகையோர் புதிய பூமியில் இருந்து சூரியனைப் போன்று பிரகாசிக்கும் புதிய எருசலேமாகிய பரலோக ராச்சியத்தைக் காணக்கூடியதாக இருக்கும், புதிய வானத்தில் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களிருப்பர். எனவே அவரவர் பரிசுத்தத்திற்கேற்ப மறுமையில் பல ஸ்தலங்கள் இருக்கின்றன எனக் காண்கிறோம். இவையெல்லாம் வெள்ளைச் சிங்காசன நியாயத் தீர்ப்பின் பின்பு வெளிப்படப் போகின்றவையாகும்.

பவுல் அப்போஸ்தலர் "தான் மூன்றும் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டதாகவும், தான் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டதாகவும்" II கொரி 12:2-3 கூறுகின்றார், இங்கு அவர் பரதீசில் முதலாம் வானத்தையும் இரண்டாம் வானத்தையும் கடந்து) மூன்றும் வானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைக்கும் சென்றிருப்பதை அவதானிக்கலாம். மரித்த பரிசுத்தவான்கள் புதிய எருசலேமும், புதிய வானமும், புதிய பூமியும் வெளிப்படும் வரை அதாவது வெள்ளைச் சிங்காசன நியாயத் தீர்ப்பு நடைபெறும் வரைக்கும், பரதீசிலுள்ள இம் மூன்று வானங்களிலும் அவரவர் தகுதிக்கு ஏற்ப வைக்கப்படுகின்றனர். வெள்ளைச் சிங்காசன நியாயத் தீர்ப்பின் பின்பு முதலாம் வானத்திலுள்ளோர் புதிய பூமியிலும், இரண்டாம் வானத்திலுள்ளோர் புதிய வானத்திலும், மூன்றும் வானத்திலுள்ள மகா பரிசுத்தவான்கள் மகிமையாக ஆயத்தமாக்கப்பட்ட புதிய எருசலேமிலும் காணப்படுவார்கள்.

எனவே கிறிஸ்துவுடன் சிலுவையில் மரித்த குற்றவாளி பரதீசில் முதலாம் வானத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து சிலுவை மரத்தில் தொங்க விடப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவன் கிறிஸ்துவை நிந்தித்துக்கொண்டிருந்தான். ஆனால் மற்றவனோ இயேசுவை நோக்கி "ஆண்டவரே! நீர் உம்முடைய ராச்சியத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும்" என்றான். இயேசு அவனை நோக்கி "இன்றைக்கு நீ என்னோடு கூட பரதீசியிலிருப்பாய் (வானவீடு) என்று மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்" என்றார். ( லூக் 23;39-43 )இதிலிருந்து கிறிஸ்து தாம் மரித்த அன்றுதானே பரதீசுக்குச் சென்று அங்குள்ள பரிசுத்தவான்களை சந்தித்ததாகத் தெரிகின்றது. மேலும், மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட ஒரு பரிசுத்தவான் மரித்தவுடன் பரதீசுக்குச் செல்கின்றான் என்பதும் இதிலிருந்து தெரியவருகின்றது.

தாம் உயிர்த்தெழும்வரை கிறிஸ்து பரதீசுக்கு மாத்திரமல்ல நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமற் போனபடியால் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கிக்கும்படி அவர்கள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கும் சென்றார், என பார்க்கின்றோம். (1பேதுரு 3 : 19) எனவே மரிக்கும் பரிசுத்தவான்கள் பரதீசுக்கும், மரிக்கும் ஏனைய ஆத்துமாக்கள் பாதாளத்திற்கும் செல்வதாக வேதத்தில் காண்கின்றோம். இயேசு பரிசுத்த லாசருவையும் ஐசுவரிய வானையும் பற்றிக் கூறுகையில் லாசரு ஆபிரகாமின் மடியில் இளைப்பாறுவதையும், ஐசுவரியவான் பாதாளத்தில் வேதனைப்படுவதாகவும் இவ் இரண்டு இடங்களுக்கும் நடுவே கடந்து வரக் கூடாதபடி பெரும் பிளப்பு இருப்பதாகவும் குறிப்பிடுகின்றார். எனவே மரித்த பின்பு பரிசுத்தவான்களும், பாவிகளும் வெவ்வேறு இடங்களில் வைக்கப்படுகின்றார்கள் என அறிய முடிகின்றது.

மேலும் பரலோகத்தில் தேவனும், தேவதூதர்களும் மாத்திரமே இருக்கின்றனர். (ஆதி 28:17, சங் 80:14, ஏசாயா 66:1, மத் 5:12, மத் 24:36) என வேதம் தெளிவாகக் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' (யோவா 3:5) என நிக்கோதேமுக்குக் கூறியவர், பரலோக ராச்சியத்திற்குத் தகுதியானவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் தாம் வாக்களித்தபடி மறுபடியும் வருவார். 'கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடு கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். (1தெசலோனி 4:16–17) என வேதம் கூறுகின்றது. அதாவது கிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்கு முன்னதாக பரலோகத்திற்குள் செல்லமுடியாது. இவற்றிலிருந்து பார்க்கும் போது பரிசுத்தவான்கள் பரலோகத்திற்குள் பிரவேசித்து விட்டார்கள் என்ற தவறான உபதேசமானது தாம் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணிய பின்பு மறுபடியும் சேர்த்துக் கொள்வேன் என்பதாக கூறிய கர்த்தரின் வார்த்தையை மறுதலிப்பதாக அமைந்துள்ளது. ஏனெனில் தாம் ஆயத்தப்படுத்திவிட்டு வருவதற்கு முன்பதாகயாரும் அங்கு வரலாம் என கூறவில்லை.

பரலோகம், பரதீஸ், நரகம், பாதாளம் என்னும் நான்கு இடங்களும் வேதாகமத்தில் தெட்டத்தெளிவாக விளக்கப்பட்டிருக்கும் போது அந்நிய வழக்குமுறைகளினால் வஞ்சிக்கப்பட்டு இத்தகைய தவறான உபதேசங்களை சபைக்குள் நுழைய விட்டதனால் இன்று அனேக சபைகள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நெருங்கிவிட்ட போதிலும் அதையிட்டு அக்கறையின்றி புத்தியில்லாத கன்னிகைகள் போல தூங்கிக் கொண்டிருப்பது மிக்கவேதனைக்குரியதாகும்.

பரிசுத்தவான்கள் பரலோகத்தில் இருக்கின்றனர் என்ற தவறான போதனையே பிற்காலத்தில் பெருந்தொகையான கிறிஸ்தவ மக்களை சிருஷ்டிகளை வணங்குதல், சிலைகளைச் செய்தல் முதலான தேவதுரோகச் செயல்களைச் செய்வதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. இது பசாசின் மிகப் பெரிய வஞ்சனையாகும்.

## ஈ. சிருஷ்டிகளை வணங்கி வேண்டுதல் செய்தல்

சிருஷ்டிகராகிய தேவன் ஆதியில் இப்பிரபஞ்சத்தையும் அதிலுள்ள உயிரினங்களையும், உயிரற்றவைகளையும் தமது ஞானத்தின்படி சிருஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டித்தார். அவர் சிருஷ்டித்தவைகளிலெல்லாம் மேலான சிருஷ்டியாக மனிதரை உண்டாக்கி சகல ஜீவ ஜந்துகளையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதி 1:28)

ஆனாலும் மேலான சிருஷ்டியாகிய மனிதனோ, கீழ்ப்படியாமையினால் பாவத்தில் விழுந்ததன் காரணமாக பாவமும், மரணமும் உலகத்தில் பிரவேசித்தது என்றும் (ரோமர் 5 : 12) எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையை இழந்து விட்டார்கள் என்றும் (ரோமர் 3: 23 – 24) பார்க்கிறோம்; மேலும் சிருஷ்டியாகிய மனிதன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான் என்றும் (சங் 144 : 4) இந்த மனிதன் மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரை விட்டு விலகுகிறவன் சபிக்கப்பட்டவன் (எரே-17:5) என்றும் பார்க்கின்றோம்.

எனவே நாம் இங்கு கவனிக்கவேண்டிய மிக முக்கிய விடயம் யாதெனில் எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகி இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோமர் 3:23, 24) என்பதாகும். ஆகவே எந்த ஒரு மனிதனும் தனது கிரியையினாலல்ல கிறிஸ்துவின் கிருபையினாலேயே நீதிமான்களாக்கப்பட்டுள்ள படியினால் எந்த ஒரு சிருஷ்டியாகிய மனிதனையும் தேவனுக்கு ஒப்பாக்குவதோ அல்லது அவனுக்குத் தேவனுக்குரிய வணக்கத்தைச் செலுத்துவதோ பாவமாகும். புருசனுடைய சித்தத்தால் பிறந்த அனைவருமே சிருஷ்டிகள் தான்.

அதைப் போலவே, கிறிஸ்துவின் மேலும் அவருடைய வசனங்கள் மேலும் விசுவாசம் வையாது மரித்துவிட்ட எந்தவொரு சிருஷ்டியாகிய மனிதரிடத்திலும் (அவர்கள் பரலோகத்திலிருப்பதாக கற்பனை செய்து) தமக்காக கிறிஸ்துவை வேண்டிக்கொள்ளும் படி கேட்டுக் கொள்வதும் பாவமாகும். ஏனென்றால், முதலாவது நாம் கவனித்தபடி பரலோகத்திற்குள் எந்தவொரு மனிதனும் இன்னும் பிரவேசிக்கவில்லை. இரண்டாவதாக நமது இரக்கமுள்ள கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாவிகளாகிய எம் மத்தியில் தாமாகவே வந்து எமக்காக தம் ஜீவனையும் கொடுத்தார். சாதாரணமாக எந்த ஒரு மனிதனும் தனது சத்துருக்களுக்காக தனது ஜீவனைக் கொடுக்க விரும்ப மாட்டான். ஆனால் கிறிஸ்துவோ பாவிகளாகிய நாம் அவருக்குச் சத்துருக்களாக இருந்த வேளையில் தமது இரக்கத்தினால் பாவிகள் மத்தியில் வந்து தம் ஜீவனை நமக்காகக் கொடுத்தார். இவரே "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என கூறுகின்றார்

இன்னொருவர் மூலமாக வரும்படி எந்த சந்தர்ப்பத்திலும் கூறவில்லை எனவே விசுவாசிகள் ஒவ்வொருவரும் அவரிடம் நேரடியாகவே செல்லுதல் வேண்டும். ஏனென்றால் விசுவாசக் குறைவினால் வரும் சகலமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் என வேதம் கூறுகின்றது. கிறிஸ்துவில் விசுவாசம் வையாதோரும் கிறிஸ்துவுக்குக் கொடுக்கவேண்டிய கனத்தைக் கொடுக்க விரும்பாதோரும் சிருஷ்டிகளாகிய மனிதர் மூலமாக அவரிடம் வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாமென எண்ணுகின்றனர். அவிசுவாசிகளைப் போன்று இவர்கள் இவ்விதம் செய்வதனால் சாபத்தையே தம்மேல் பெற்றுக் கொள்கின்றனர். ஏனென்றால் கிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே பரலோகத்தில் எதையாகிலும் பெற்றுக்கொள்ளலாமென வேதம் தெளிவாகக் கூறுகின்றது. (1தீமோ 2:5, 1யோ 2:1-3, எபி 7:25, 4:14-16 அப் 4:12. ரோ 8:34, எபேசி 2:18 ) சிருஷ்டிகளாகிய மனிதர் அனைவரும் பாவிகளாக இருப்பதனால் (1யோ 1:8, ஏசாயா 64:6) கர்த்தராகிய கிறிஸ்து அனைவருக்கும் இரட்சகராக இருக்கின்றார். கிறிஸ்துவின் தாயாராகிய மரியாள் கூட "என் ஆவி என் இரட்சகராகிய தேவனிடத்தில் களிகூருகின்றது" ( லூக் 1:47) என மகிழ்ச்சி பொங்க கூறுகின்றார். ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்தவர்கள் மாத்திரமே பரலோக ராச்சியத்தில் பிரவேசிக்கலாம் என்னும் நிபந்தனைக்கமைய கர்த்தரின் கட்டளைப்படி பரிசுத்தாவிக்காக சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் எருசலேமில் மேல் வீட்டில் காத்திருந்தார்கள். இவர்களெல்லோரும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும் அவரது சகோதரருடனும் கூட ஒருமனப்பட்டு ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள், (அப் 1:13-15) அனைவரும் சாதாரண சிருஷ்டிகளாக இருந்தபடியினால் சிருஷ்டிகரை நோக்கி வேண்டுதல் செய்ய வேண்டியதாயிற்று.

யோவான் பத்மூதீவில் தரிசனங்களைக் கண்டபோது இருசந்தர்ப்பங்களில் தேவதூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தான். அப்போது தூதன் "இப்படிச் செய்யாதபடிக்குப்பார்...... நானும் ஒரு ஊழியக்காரன் தேவனைத் தொழுதுகொள்" (வெளி 19:10, 22:8-9) என கூறுகின்றான். இன்னொரு சந்தர்ப்பத்தில கொர்நேலியு பேதுருவின் பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டான். அப்போது பேதுரு அவனைத் தூக்கி எடுத்து "எழுந்திரும் நானும் ஒரு மனுஷன் தான்" என கூறுவதைப் பார்க்கின்றோம். (அப் 10:25-26) எனவே, தேவதூதரையானாலும் சரி அப்போஸ்தலரையானாலும் சரி பரிசுத்தவான்களெனப்படும் எவரையானாலும் சரி வணங்குதலோ, வேண்டுதல் செய்தலோ பாவமாகும். தேவனை மாத்திரமே ஆராதித்தல் வேண்டும் என வேதம் மிகத்தெளிவாகக் கூறுகின்றது. (மத் 4:10, லூக் 11:27-28, உபா 7:9 13:2-3 )

இதைக் குறித்து பவுல் ரோமருக்கும், கொலோசெயருக்கும் எழுதின நிருபங்களில் மிகவும் தெளிவாகக் கூறி வைத்துள்ளார். "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரை தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர், ஆமென்.'' (ரோமர் 1:25 கொலோ 2:18-19)

பரிசுத்தவான்கள் பரலோகத்தில் இருக்கின்றனர் என்னும் தப்பான உபதேசம் புகுத்தப்பட்ட பின்புதான் அவர்களை வணங்க வேண்டும் என்ற பிழையான வழக்குமுறையும் ஏற்படலாயிற்று. இவ்விதம் சிருஷ்டிகளை வேண்டுதல் செய்யும் அநேகர், தாங்கள் வணங்குவதில்லை, பரிசுத்தவான்களை ஞாபகப்படுத்துகிறோம் எனத் தமது மனச்சாட்சிக்கு விரோதமாகச் சாட்டுப்போக்குக் கூறினாலும் நடைமுறையில் அவர்கள் கிறிஸ்துவைவிட மேலான வணக்கங்களை சிருஷ்டிகளுக்குச் செய்துவருவதை மறுக்கவே முடியாது. இது தேவதுரோகமாகும்.

## உ. சுரூபங்களைச் செய்தல்

தேவபார்வையில் மிகவும் அருவருக்கப்பட்டதும் கேவலமானதுமான செயல் சுரூபங்களையும் விக்கிரகங்களையும் செய்தலும் வணங்குவதுமாகும். பழைய ஏற்பாடு முழுவதிலும் இப் பாவத்தினிமித்தம் இஸ்ரவேலருக்கு வந்த சாபங்களையும், ஆக்கினைகளையும் ஏராளமாகக் காணலாம்.

இஸ்ரவேலருக்கு சீனாய்மலையில் மோசே மூலமாக ''அளிக்கப்பட்ட பத்துக்கற்பனையில் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது. ''மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ்த்தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்...'' (யாத்-20:4-5) வேதத்தில் இன்னும் பல இடங்களில் இவ்விடயம் திரும்பதிரும்ப வலியுறுத்திக் கூறப்படுகின்றது (லேவி 26 : 1, உபா 16 : 22)

இன்று தம்மைக் கிறிஸ்தவர்களெனக் கூறிக்கொள்ளும் பலர் பரிசுத்தவான்களது பெயரால் சுரூபங்களைச் செய்து ஆராதிப்பது அனைவரும் அறிந்ததே. ஆனாலும இப்படிச் செய்து கொண்டும் தாங்கள் விக்கிரகாராதனை செய்வதில்லை, பரிசுத்தவானகளது ஞாபகத்திற்காக சிலைகள் செய்துள்ளோம் என கூறுகின்றனர். ஆனால் பத்துக் கற்பனையில் ஒரு சொரூபத்தையாகிலும் விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் என தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதை அவதானித்தல் வேண்டும். யாதொரு சிலையையும் நிறுத்த வேண்டாம். (உபா.16;22,லேவி 26 :1) எனக் குறிப்பிட்ட இடங்களையும் அவதானிக்குக. ஒரு சொரூபத்தை ஞாபகத்திற்கோ அல்லது வணங்குவதற்கோ அல்லது சேவிப்பதற்கோ செய்வது பாவமே. யூதர்களின் ஆலயங்களில் எந்த ஒரு சொரூபங்களையும் இக்காலத்தில் காணமுடியாது. அதைப்போலவே பெந்தகோஸ்தே கிறிஸதவ சபைகளின் வசுவாசவீடுகளிலும் சுரூபங்களைக்காணமுடியாது. ஏனென்றால் ''உண்மையாகத் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலம் வரும். அது இப்போதே வந்திருக்கிறது தம்மைத் தொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாக இருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்'' (யோவான் 4 : 23) என இயேசு கூறிய காலம் இப்போதே வந்திருக்கிறது.

கி. பி. 4ம் நூற்றுண்டின் பின்பு சிருஷ்டிகள் வணக்கம் ஆரம்பித்ததிலிருந்து மக்கள் தாம் வணங்கும் சிருஷ்டிகளுக்கு சுரூபங்களைச் செய்யும் தேவையும் ஏற்பட்டதனுல் இப்பாவமும் சபையில் சேர்ந்து விட்டது. “அவர்கள் அழிவில்லாத தேவ மகிமையை அழிவுள்ள மனுஷர்கள்..... ரூபங்களாக மாற்றினுர்கள்'' (ரோமர் 1:23) எனக் கூறப்பட்டபடி இப்படியாயிற்று. இச்சுரூபங்களுக்கு ... நன்மை செய்யும் சக்தியில்லை. (எரே 10:2–5) “இவைகளைச் செய்கிறவர்களும் நம்புகிறவர்களும் அவைகளைப் போலவே இருக்கின்றனர்,'' (சங் 115:8) “இவற்றை வணங்குகிறவர்களும் சேவிக்கிறவர்களும் சபிக்கப்பட்டவர்கள்'' (யாத் 20:5, வெளி 19:20, 1 கொரி 6:9, உபா 27:15) எனவே விக்கிரகங்களை அழித்துப்போடுங்கள்'' (உபா 12:2–3, 2 இராஜா 18:4) என வேதம் கூறுகின்றது.

இஸ்ரவேலர் கேரூபீன்களைச் செய்ததையும் (2நாளா3:10) வெண்கல சர்ப்பத்தைச் செய்ததையும் (எண் 21;8) விக்கிரகங்களைச் செய்வோர் ஆதாரமாகக் காட்டுகின்றனர். இவை இரண்டும் தேவகட்டளையால் செய்யப்பட்டன. ஆனுல் 1. தற்போது செய்யப்பட்டிருக்கும் சுரூபங்களை தேவன் எப்போது செய்யும்படி கட்டளையிட்டார்? 2. கேரூபீன்கள் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் வைக்கப்பட்டிருந்தபடியினுல் அவற்றை யாருக்கும் பார்க்கமுடியாதிருந்தது. 3வெண்கலச் சர்ப்பத்தையும் இஸ்ரவேலர் பின்பு அழித்து விட்டனர், (2இராஜா 18:3) விக்கிரகங்களைச் செய்யும் சபைகள் தற்போது தம் தவறை உணர்ந்து கொண்டாலும் அவற்றை அழிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

## ஊ. உத்தரிப்பு ஸ்தலம்

சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். ( II கொரி 5:10)

மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன, விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள் பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுக்கள் முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை ... (கலா 5:9-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி வசனங்களிலிருந்து நாம் காண்பது யாதெனில் இவ்வுல கில் எமது சரீரத்தில் செய்யும் பாவங்களுக்குரிய பலனை அடையும் படிக்கு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பதாக வெளிப்படவேண் டும் என்பதாகும். இந்த நியாயாயாசன வேளையிலே "ஜீவ புத்தகத் தில் எழுதப்பட்டவனுகக் காணப்படாதவனெவனே அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்" என யோவானுக்கு வெளிப்படுத்தப்பட் டதைப் பார்க்கின்றேம். (வெளி 20:15)

பரிசுத்த வேதாகமத்தில் பரலோகமும் (ஆதி 28:17, சங் 80:14, ஏசாயா 66:1, மத் 5:12, 24:36, 6:20, எபே 3:15, லூக் 15;18, வெளி 18:20) நரகமும் (மத் 18:8-9, 3:12, 8:12, 22:13, 25:30, மாற்கு 9:44-48, வெளி 20:14, 14:10) நித்தியத்திற்கும் உரியதெ னக் குறிப்பிடப்பட்டுள்ளது. பரலோக ராச்சியம் வெளிப்படும்வரைக் கும், அதாவது, இறுதி நியாயத் தீர்ப்பு நடைபெறும்வரை மரித்த பரிசுத்தவான்கள் பரதீசில் இளைப்பாறுகின்றுர்களென்றும், ஏனையோர் பாதாளத்தில் வைக்கப்பட்டுள்ளார்களென்றும் ஏற்கெனவே கவனித் தோம். இவ்விதமாக பரலோகம், நரகம், பரதீஸ், பாதாளம் என நான்கு இடங்கள் மாத்திரமே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆனல் உத்தரிக்கும் ஸ்தலம் ஒன்றும் மேலதிகமாக இருப்பதாகக் கற்பனை செய்து, அற்ப பாவங்களைச் செய்தவர்கள் அங்கு அனுப்பப் படுவதாகவும், அங்கு தண்டனையை நிறைவேற்றிய பின்பு பரலோகம் செல்வதாகவும், பூலோகத்தார் அங்கு சென்றுள்ள ஆன்மாக்களைத் தமது பணம், செபம் மூலமாக விரைவில் பரலோகம் அனுப்பலாம் எனவும் கற்பனைமேல் கற்பனை செய்து இக்கற்பனைகளையெல்லாம் சடங் காசாரமாக்கி, பாமர மக்களை நம்ப வைத்துள்ளமை தேவனது பார் வையில் மிகவும் பாரதூரமான குற்றமாகும்.

மேலும், பரலோக ராச்சியத்தில் உள்ள ஸ்தலத்தை ஆயத்தப் படுத்தி பரிசுத்தவான்களை அழைத்துச் செல்ல வருவதாக வாக்குப் பண்ணிய கர்த்தராகிய கிறிஸ்து, இனித்தான் வரப்போகின்றுர். அது வரை பரலோக ராச்சியத்திற்கு யாரும் செல்ல முடியாது. அத்துடன் இவ்வுலகத்தில் நமது சரீரத்தில் செய்யும் நன்மை தீமைகளுக்காகத் தான் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டியுள்ளது, வேருெரு ஸ்தலத்தில் ஆவியில் போய் வேதனைப்பட்டுவிட்டு சரிசெய்துகொள்ள முடியுமானல் கிறிஸ்துவின் இரத்தம் சிந்துதல் மூலமாக இவ்வுலகத்தி லேயே கிடைக்கும் பரிபூரண இரட்சிப்பு அர்த்தமற்றதாகிவிடுகின்றது.

அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றபடியே கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபி 9:27,28) என வேதம் கூறுகின்றது. இங்கு மனிதருக்கு ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. மறு உலகத்திலும் பாவங்கள் மன்னிக்கப்படும் என்றோ அதற்கு ஒரு விசேடஸ்தலம் உண்டென்றோ வேதம் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிடவில்லை என்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும். உத்தரிக்கிற ஸ்தலம் ஒன்று உண்டென கூறுவோர்"...... எவனுகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ப் பேசினுல் இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத் 12:32) என்னும் கிறிஸ்துவின் வசனத்தை மாத்திரம் ஆதாரமாகக் காட்டுகின்றனர். இம்மை என்பது இவ்வுலகம், இம்மைக்கு அப்பால் உள்ளதெல்லாம் மறுமை என்பது தெளிவு. இங்கு மறுமையில் மன்னிக்கப்படுவதற்கு வேறொரு விசேட இடம் உண்டு என அவர் கூறவில்லை. வேத சத்தியங்களை 'இருக்கலாம்' என்னும் ஊகத்தின் அடிப்படையில் உருவாக்க முடியாது என்பது கவனிக்க வேண்டிய விடயமாகும்.

எனவே உத்தரிக்கிற ஸ்தலத்திற்கு மரித்த ஆன்மாக்கள் செல்வதாகவும் இங்கு பூசை, நற்கிருத்தியங்களுக்காகச் செலவு செய்தால் அவர்களைப் பரலோகம் அனுப்பலாம் எனவும் எண்ணுவது கிறிஸ்தவ சத்தியங்களுக்கும் கிறிஸ்துவின் பரிபூரண இரட்சிப்புக்கும் எதிரான போதனையாகும்.

## எ. குழந்தை ஞானஸ்நானமும் தெளிப்பு ஞானஸ்நானமும்

கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கும் (மாற் 16:16, அப்8:36,37) இயேசுவுக்கு சீஷரானவர்களுக்கும் (மத் 28:19) அவரது வார்த்தையை சந்தோசமாக ஏற்றுக்கொண்டவர்களுக்கும் (அப் 8:36,37) மனந்திரும்பியவர்களுக்கும் (அப் 2 : 38, மத் 3 : 6) மாத்திரமே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாகப் பார்க்கிறோம்.

விசுவாசமுள்ளவனுகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:16) என இயேசு கூறினர். ஒருவன் தான் பாவி என உணர்ந்து மனந்திரும்புவதற்கும், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைச் சந்தோசமாக ஏற்றுக்கொண்டு அவரை விசுவாசிப்பதற்கும் பராயம் அடைந்தவனுக இருக்க வேண்டும்.

குழந்தைகளிற்கு இவ்விடயங்களை உணர்வதற்கோ அல்லது கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கோ முடியாது. 'சிறுபிள்ளைகளை என்னண்டைவரவிடுங்கள் பரலோக ராச்சியம் அத்தகையவர்களுடையது' என கிறிஸ்து கூறினர். ஒரு பாவமும் அறியாத பச்சிளம் பாலகருக்கு பாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிப்புக்கென்று (அப் 2:38) ஞானஸ்நானம் கொடுப்பது கிறிஸ்தவ சத்தியங்களைக் கேலிக்கூத்தாக்கும் செயலாகும். விசுவாசிப்பவர்களுக்கு மாத்திரம் ஞானஸ்நானம் கொடுக்கும்படி கிறிஸ்து கூறியிருக்க, விசுவாசியாத குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தல் கிறிஸ்துவின் கட்டளையை வேண்டுமென்றே மீறும் செயலாக உள்ளன.

ஞானஸ்நானம் ஒரு சடங்காசாரமல்ல. அப்போஸ்தலரினல் மிகவும் கவனத்துடன் பின்பற்றப்பட்ட தேவ கட்டளையாக அமைந்துள்ளது எனவும் பார்க்கிறேம். (அப் 2:38,19:5-6, யோவா 1:13) மத் 3:15-16, லூக்7:29-30, 1பேதுரு 3:21, கலாத்3:27, அப்10:44-48,

ஞானஸ்நானம் என்பது "முழுகுதல்" என்னும் அர்த்தமுடையது. பாவத்திற்கு மரித்து கிறிஸ்துவுக்குள் நீதிக்குப் பிழைக்கும்படி மறுபடியும் பிறத்தலையே இது குறிக்கின்றது. (ரோமர் 6:11, கொலோ 2:12, 3:3, ரோமர் 6:24, யோவான் 3:3-5) இதற்காகவே (பாவத்திற்கு) மரித்தவன் அடக்கம் பண்ணப்பட்டு (நீரினுள் அமிழுதல்) நீதிக்குப் பிழைக்கும்படி எழுந்திருப்பதன் (நீரினுள் இருந்து எழும்புதல்)பொருட்டு முழுக்கு ஞானஸ்தானம் கொடுக்கப்படுகின்றது. அதாவது கிறிஸ்துவுக்குள் ஜலத்தினல் மறுபடியும் பிறத்தலை இது குறிக்கின்றது.

இதனல் தான் ஆதிச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தண்ணீர் மிகுதியாய் இருந்த இடங்களில் இறங்கி ஞானஸ்நானம் பெற்ருர்கள் எனப் பார்க்கின்றேம். எத்தியோப்பியனும், பிலிப்புவும் தண்ணீரில் இறங்கினுர்கள் (அப் 8:37) தண்ணீர் மிகுதியாய் இருந்தபடியினல் ஞானஸ்நானம் கொடுத்தான். (யோவான் 3:23) இயேசு ஜலத்திலிருந்து கரையேறினர். (மத் 3:16) இவையெல்லாம் ஆதியில் முழுக்கு ஞானஸ்நானத்திற்காக தண்ணீரினுள் இறங்க வேண்டியிருந்ததையே காட்டுகின்றன.

ஆனல் தண்ணீரை உடலில் தெளித்து ஞானஸ்தானங் கொடுத்ததாக வேதத்தில் எங்கும் ஆதாரமில்லை, அத்தோடு இது முழுகுதல் என்னும் அர்த்தத்தையுடைய ஞானஸ்ஞானத்தை அர்த்தமற்றதாக்கும் ஒரு செயலாகும். ஜஸ்ரின் மாட்டர் (கி.பி.140)ஸிரின் (கி.பி. 374) கிறிஸ்சொஸ்தம் (கி.பி.398) போன்ற ஆதிச்சபைப்பிதாக்களும் வரலாற்ருசிரியர்களும் தமது காலத்தில் தண்ணீருக்குள் இறங்கி முழுக்கு ஞானஸ்நானம் பெறும்முறையே இருந்ததாக எழுதியுள்ளனர். கி.பி754ம் ஆண்டில் 3ம் பயஸ் பாப்பு தண்ணீரைத் தெளித்து ஞானஸ்நானம்கொடுக்கலாம் எனக்கூறியதன்பின்பே ரோமன் கத்தோலிக்க சமயத்தில் இம்முறை ஆரம்பமாயிற்று. குழந்தைகள் விசுவாசியாதவர்கள், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது பிரயோசனமற்ற ஒரு சடங்காசாரம் என்பதும் முழுக்கு ஞானஸ்நானத்திற்குப் பதிலாக தண்ணீரைத் தெளித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமில்லாத ஒரு சடங்காசாரம் என்பதும் இவற்றின் மூலம் நன்கு தெரிகின்றது. எனவே பராயம் அடைந்தவர்களுக்குக் கொடுக்கப்படும் முழுக்கு ஞானஸ்நானமே சத்தியத்திற்குரியதாகும்.

## ஏ. ஏழாம் நாள் ஓய்வுக்காரருடைய போதனைகள்

ஏழாம்நாள் ஓய்வுக்காரர் (Seventh day Adventist) கிறிஸ்து மிகாவேல் தூதனென்றும், கிறிஸ்து சிலுவை மரணத்தில் ஒப்புரவாகுதலை பரிபூரணமாய் செய்யவில்லை என்றும், கிறிஸ்து பரலோகத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு 1844 ம் ஆண்டு சென்றார் என்றும், நியாயப் பிரமாணத்தின்படி சனிக்கிழமையை (ஏழாம்நாள்) ஓய்வுநாளாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் போதிக்கின்றனர். பரிசுத்த வேதாகமத்தையே தமது வேதபுத்தகமாகக் கொண்டுள்ள இவர்கள் இவ்வித போதனைகள் மூலமாக......வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போனவர்களாக (I தீமோ 4 : 1) இருக்கின்றனர்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபம் முழுவதுமாக நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவதூதரிலும் பார்க்க எவ்வளவு மேலாக விசேஷித்தவர் என்பதை விளக்குவதாகவே அமைந்திருக்கின்றது. தேவதூதர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கின்றார்களென்றும் (எபி 1 : 14) தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர் என்றும் (எபி 1 : 6) வேதம் கூறும்போது மிகாவேல் தூதனும் இதற்குள் அடங்குபவனாகவே இருக்கிறான்.

கர்த்தரது இரண்டாம் வருகையின் போது கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என (1 தெச 4 : 16 ல்) காண்கின்றோம். (யோவான் 5 : 28ல்) ... பிரேதக் குழியிலுள்ள அனைவரும். அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருப்பார்களெனப் பார்க்கின்றோம்.

இங்கு கர்த்தர் ஆரவாரத்தோடு வருகின்றார்; அவருடைய சத்தம் மரித்தோரை எழும்பப்பண்ணும்; பிரதான தூதனும் சத்தமிட்டுக் கொண்டு வருகிறான்; தேவஎக்காளத்தொனியோடு கர்த்தர் வருகின்றார்; கர்த்தரது வருகை மிகவும் ஆரவாரத்தோடு இருக்கும் என்பது தான் இதிலிருந்து விளங்குகின்றது. ஆனால் இவ்வசனங்களைக் கொண்டு சர்வ வல்லமையுள்ள தேவனை தேவதூதரது தரத்திற்குக் குறைப்பது கிறிஸ்தவ சத்தியத்திற்கே பங்கமேற்படுத்துவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவின் ஒப்புரவாகுதல் கல்வாரியில் பூரணமாக இடம்பெற வில்லை என்றும், 1844 ம் ஆண்டில் அவர் பரலோகத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லும்வரை அது குறைவுடையதாக இருந்ததென்றும் ஏழாம்நாள் ஓய்வுக்காரர் கூறுகின்றனர். வில்லியம் மில்லர் என்பவர் 1843 - 10 - 23ம் திகதி கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்குமெனக் கூறிவந்தார். ஆனால் குறிப்பிட்ட தினத்தில் அவ்விதம் நடைபெறவில்லையாதலால், கணிப்பீடு பிழைத்துவிட்டதாகவும் ஒருவருடம் பிந்தி 1844 ல் இது இடம்பெறுமெனவும் கூறினர். ஆனால் அவ்விதம் நடைபெறாத போது, அவர் தனது தவறை ஏற்கவேண்டியதாயிற்று. இதனால் அவரது சீடர்கள் மிகவும் ஆத்திரமடைந்தனர். அவரது சீடர்களில் ஒருத்தியாகிய திருமதி வைற்(White) என்பார் சீடர்களைச் சாந்தப் படுத்துவதற்கு, கிறிஸ்து இத்திகதியில் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றார் என விளக்கமளித்தார். இவ்விதமாக இக் கோட்பாடு ஆரம்பித்தது.

"இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப் பற்றியும் மேன்மை பாராட்டுகிறோம்" (ரோமர் 5:11) என பவுல் அப்போஸ்தலர் கூறுகிறார். "அவரது குமாரனாகிய கிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவங்களினின்றும் நம்மைச் சுத்திகரித்தது" என வேதம் கூறுகின்றது. மேலும் எபி 9:24 ல் இன்னும் தெளிவாகக் கூறப்படுகின்றது. ஆனால் இவர்கள் பசாசின் வலையில் சிக்கி கிறிஸ்து 1844ல் தான் மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் சென்றார் எனக் கற்பனை செய்து கிறிஸ்துவின் பரிபூரண இரட்சிப்பைக் குறை கூறுபவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களின் கூற்றுப்படி பார்த்தால் பேதுரு, பவுல், யோவான் முதலான ஆதி அப்போஸ்தலரும் மற்றும் ஆதிப் பரிசுத்தவான்களும் 1844ம் ஆண்டுவரை பூரண இரட்சிப்புக்காகக் காத்திருந்தார்கள் என்றல்லவா எண்ணத் தோன்றுகின்றது.

ஏழாம் நாள் சனிக்கிழமையை ஓய்வு நாளாக ஆசரிக்க வேண்டுமென்பது இவர்களது பிரதான கோட்பாடாகும்.

1. நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியினால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. (ரோமர் 6:14)

2. ......நியாயப் பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப் பிரமாணத்திற்குட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 3:19)

3. ......நியாயப் பிரமாண புத்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கின்றதே. (கலா 3:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலிருந்து நாம் பார்க்கும்போது கிறிஸ்தவ விசுவாசிகள் கிருபைக்குக் கீழ்ப்பட்டவர்களே ஒழிய நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. அத்துடன் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவன் நியாயப் பிரமாணம் சொல்கின்ற அத்தனையையும் செய்யாவிட்டால் அவன் சபிக்கப்பட்டவனாக இருப்பான் எனப் பார்க்கின்றோம். ஓய்வு நாளை மாத்திரம் அநுசரிக்கும்படி நியாயப் பிரமாணம் கூறவில்லை. லேவியராகமத்திலும், உபாகமத்திலும் நியாயப் பிரமாணம் பற்றிய விரிவான சட்டங்களைத் தேவன் கொடுக்கிறதைப் பார்க்கின்றோம். உதாரணமாக லேவியராகமம் 23ம் அதிகாரத்தில் தேவன், மோசேக்கு ஏழாம் நாள் ஓய்வு நாள், பாஸ்கா, பெந்தகோஸ்தே, ஆசரிப்புக்கூடாரம் முதலானவைகளைக் கர்த்தருடைய பண்டிகை நாட்களாக இருப்பதனால் பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி குறிப்பிடுகின்றார். எனவே ஏழாம் நாள் ஓய்வுநாளை அனுசரிப்போர் தேவகட்டளைப்படி ஏனைய பண்டிகைகளையும் அநுசரிக்கவேண்டியவராவர். இவர்கள் கூறுவதைப் போல் பத்துக் கற்பனை மாத்திரம்தான் நியாயப்பிரமாணம் அல்ல என்பதைக் கவனிக்க வேண்டும். நியாயப் பிரமாணத்தில் அநேக விடயங்களைப் பற்றித் தேவன் பேசுகின்றார். பத்துக் கற்பனை அவற்றின் சாராம்சம் மாத்திரமே.

இதற்கு ஆதாரமாக கிறிஸ்து ஓய்வுநாளை அனுசரித்த விடயம் எடுத்துக்காட்டப்படுகின்றது. பெந்தகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் அக்கினி பொழியத் தொடங்கிய வேளையில் இருந்துதான் பரிசுத்த சபை ஏற்படுத்தப்படுகின்றதென்பதையும், கிருபையின் காலம் ஆரம்பிக்கின்றதென்பதையும் கவனித்தல் வேண்டும்.

நாம் புத்திர சுவீகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத் தக்கதாக "......நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். (ரோமர் 4:4–5) எனவே தேவன் நம்மை மீட்கும் பொருட்டு தாம் நியாயப் பிரமாணத்திற்குக் கீழாக வேண்டியிருந்தது கலாத்தியர் சபையில் இவ்விதம் நியாயப் பிரமாணத்தைப் பின்பற்ற வேண்டுமென்று சிலர் போதிக்கத் தொடங்கியபோது பரி. பவுல் அவர்களை மிகவும் கண்டித்து "புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கியவன் யார்...." (கலா 3:1) என வினவுகின்றார்.

பெந்தெகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துடன் சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு கிறிஸ்தவர்கள் எந்தவொரு வேளையிலாகிலும் ஏழாம்நாள் ஓய்வுநாளை அனுசரித்ததாக எவ்விடத்திலும் சொல்லப்படவில்லை. ஆனால் பவுல் பல சந்தர்ப்பங்களில் சத்தியத்தை எடுத்துக் கூறும்படிக்கு யூதர்கள் ஓய்வுநாளில் கூடும் இடங்களிற்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று அவர்களிற்குப் பிரசங்கித்து வந்தார் என்று மாத்திரம் தான் காண்கின்றோம்.

ஆனால் வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் அப்பம் பிட்கும்படி சபையோர் கூடி வரும் வழக்கமுடையவர்களாக இருந்துள்ளார்களென்று வேதத்தில் பார்க்கின்றோம். பவுல் துரோவா பட்டணத்திற்கு வந்து ஏழுநாள் தங்கியிருந்தாலும் வாரத்தின் முதல்நாளில் தான் அப்பம் பிட்கும்படி சீஷர்கள் அங்கு கூடி வந்திருந்தார்கள். (அப் 20;67) கர்த்தருடைய இராப்போசன ஆராதனைகளுக்காக (1கொரி 11 : 20) சபையோர் இவ்விதம் வாரத்தின் முதல் நாளிலேயே கூடி வந்தனர். மேலும் பவுல் இதுபற்றி "ஆகையால்... பண்டிகை நாளையும் மாதப் பிறப்பையும் ஓய்வுநாளையும் குறித்தாவது ஒருவனும் உங்களை குற்றப் படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கின்றது" (கொரி 2 : 16 17) என கூறுகின்றார். ஆதிசபையிலேயே ஏழாம் நாள் ஓய்வுநாளாக அனுசரிக்கப்படவில்லையென்றும் அது அவசியமாகக் கருதப்படவில்லையென்றும், ஞாயிற்றுக்கிழமையிலேயே சீஷர்கள் சபை கூடுதலை நடத்திவைத்திருக்கின்றார்களென்றும் காண்கின்றோம்.

பாவம் என்றால் என்ன என்பதற்கு இவர்கள் (1யோவான் 3:4)ல் 'நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்' என யோவான் கூறுவதை எடுத்துக்காட்டுகின்றனர். ஆனால் யோவான் அதே அதிகாரத்தில் கிறிஸ்துவின் பிரமாணத்தைக் குறித்து "நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கின்றது". (1யோவான் 3:23) என விளக்குகின்றார். இதனால் தான் கிறிஸ்துவும் தன்னை விசுவாசிக்காதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:16) என்றார். எனவே கிறிஸ்துவை விசுவாசிக்காமல் கிறிஸ்துவை தேவதூதருக்குச் சமமாக்குவதும் பாவமாகும்.

வேதாகமம், நாம் நியாயப் பிரமாணத்திற்கு மரித்தவர்களென்றும் (ரோமர் 7;4) விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கின்றார் (ரோமர் 10:4) என்றும் தெளிவாகக் கூறுகின்றது. எனவே, புதிய ஏற்பாட்டின் பிரமாணம் கிறிஸ்துவின் புதிய பிரமாணமாகும். (1கொரி 9:21, கலா 6:12) கிறிஸ்து "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோவான் 15:10) எனக் கூறுகின்றார். இங்கு 'என் பிதாவின் கற்பனைகள்" "என் கற்பனைகள்" என இரண்டு வித கற்பனைகளைக் குறிப்பிடுகின்றார். கிறிஸ்து பிதாவின் கற்பனைகளாகிய விருத்த சேதனம், பாஸ்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலானவற்றையெல்லாம் அனுசரித்ததைப் பார்க்கின்றோம். எனவே நாம் கிறிஸ்துவின் அன்பின் பிரமாணங்களைப் பின்பற்றவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

கிறிஸ்து வேதபாரகனுகிய நிக்கதேமுவிடம் மறுபடியும் பிறத்தலைப்பற்றித்தான் உபதேசித்ததைக் காண்கின்றோம். நியாயப்பிரமாணத்தைப் பற்றியல்ல. எமக்கு முற்றும் புதிதான, மறுபடியும் பிறந்த அனுபவமுள்ள ஆவியின் கனிகளைக் கொண்ட நிறைவான ஜீவியமே தேவைப்படுகின்றது. ஆவியின் கனிகளுக் கெதிரான பிரமாணம் ஒன்றுமில்லை, (கலா 5:22–23) என வேதம் மிகத்தெளிவாகவும், திட்டவட்டமாகவும் கூறுகின்றது. எனவே பவுல் கூறுகின்ற படி புத்தியீனமான தர்க்கங்களைவிட்டு விலகுவோமாக (தீத் 3:9) நியாயப் பிரமாணத்தின் மூலம் நீதிமானுகுதல் இருக்குமாயின் கிறிஸ்துவின் மரணம் வீணுயிருக்குமே.

# 9. மனுக்குலத்திற்கு அளிக்கப்பட்ட மாபெரும் நற்செய்தி

"ஆதியில் வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனுயிருந்தது.........., அந்த வார்த்தை, மாம்சமாகி கிருபையினுலும் சத்தியத்தினுலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினுர்" (யோவான் 1:1–14). மனிதரைப் பாவத்திலிருந்து இரட்சிப்பதற்காக தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு (1 திமோ 3:16) தம் விலையேறப் பெற்ற இரத்தத்தைச் சிந்தினுர் (1 பேதுரு1:18–20). இயேசு கிறிஸ்துவாகிய இவரே மெய்யானதேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறுர். (1 யோவா 5:20, யோவான் 17:3) அவராலேயன்றி வேறெருருவராலும் இரட்சிப்பில்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறெரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை (அப் 4:12). அவர் தேவனென்று உலகத்தில் விசுவாசிக்கப்பட்டார். மகிமையில் எடுத்துக் கொள்ளப்பட்டார். (1 திமோ 3:16). குறித்த நாளிலே அவர் பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார். (அப் 17:31). இவர் (கர்த்தர்) தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் (இரட்சிக்கப்பட்டவர்களாகிய) நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். (1 தெச 4:16, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org